பதிவு என் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா மூன்று





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ். 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வரு கார்த்திகை-மீ 20-உ (5—12—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 32.



## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது, முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், உச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,

A. முருகேச முதலி.

No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-வரு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா

மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

## வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, ஏப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ, 1—8—0.

## கீழ்காய்நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்
8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0
ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0
வி. பி. தபாற் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷதசாலை,
கு. மேல வீதி, கும்பகோணம்.



## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் வீடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0
1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனம்.
[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்.
சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதராஸ்.



இனம்! இனம்!!
**டேபில் டயம்பீஸ் இனம்!!!**




**(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)**

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனம் டைம்பீஸுடன் ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

**தி பான்ஸி வாட்சு அவுஸ்,**
15-A பீட், அண்ணா பிள்ளைத் தெரு,
மதராஸ்.



## மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.
படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா
படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.



## "தமிழன்"

(வாரப்பத்திரிகை)

பூர்வ தமிழர் சமயம் யாது?
தமிழர் தாழ்ந்தவரானதேன்?
தாழ்த்தப்பட்டவர் முன்னேறுவதெப்படி?
இவைகளையறிய "தமிழன்" பத்திரிகை அவசியம் படிக்கவேண்டும்.

உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ. 3 0 0
வெளிநாட்டுக்கு ,, 4 0 0

மானேஜர்,
"தமிழன் ஆபீஸ்',
ஆண்டர்சன்பேட்டை,
கோலார், கோல்டுபீல்டு.



பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை



## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.




64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதராஸ்



## எது வேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸதிரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனாதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.



"பணம் சம்பாதிக்கப் பாதைகள் 200"
என்னும்

## 200 தொழில் முறைகள்.

**4 பாகங்கள், 34 அத்தியாயங்கள்.**

சொற்ப தொகையினால் சோப், செண்டு முதலியவைகளைச் செய்ய ஆரம்பித்தவர்கள் இப்போது லட்சாதி பிரபுக்களாய் இருக்கிறார்கள். பீச்சாம் ஹாலோவே முதலிய சிலர் பேர்போன மருந்துகளைச் செய்து கோடீஸ்வரர்களாக ஆகி விட்டார்கள். இதுபோன்ற தொழில்களை நீங்கள் ஏன் சுலபமாய் ஆரம்பிக்கக்கூடாது.

200 அபூர்வ தொழில்களின் செய்முறைகளடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 4—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

இதன் முழு விவரமடங்கிய 14 பக்கம் துண்டுப்புத்தகத்திற்கு 1 அணா ஸ்டாம்புடன் எழுதவும்

ஆர்ட் புக்ஸ் பப்ளிஷிங் கம்பெனி,
6, திருச்சினாப்பள்ளி.



## நம்பிக்கையான வியாபார ஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷர்ட் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

**என். தண்டபாணி கம்பெனி.**
தபால் பெட்டி 292.
6-99 பவழக்காரத்தெரு,
சென்னை

## காரணமென்?

பார்ப்பனரல்லாதார் ஒருவர் எத்துணை அறிவிற் சிறந்தவராயினும், பேசுவதில் வல்லவராயினும் அரும் பெருந்தியாகம் செய்தவராயினும் அவரைச் சென்னைப் பத்திரிகைகள் புகழமாட்டா! ஆனால் ஒரு பார்ப்பனர், எவ்வளவு இழிந்தவராயினும் அவரை வானவளாவப் புகழ்தற்கு இச்சென்னைப் பத்திரிகைகள் அஞ்சுகின்றனவல்ல. அதற்குக் காரணமென்னையெனின், சென்னையில் இருக்கும் பத்திரிகைகளில் பெரும்பாலன ஐயர் ஐயங்கார்கள் பத்திரிகைகள். அவைகள் இந்தியர் பணத்தில் வெளிநாடு சென்று, இந்தியர்கள் பிறப்புரிமைகளை விற்ற கனம் சாஸ்திரிகளை வானமளாவப் புகழும். அவைகள் சர். சி. பி. இராமசாமி ஐயர் ஆகாயக் கப்பலில் போனார், இங்கே விருந்துண்டார், அங்கே விருந்துண்டார், என்று தனி நிருபர்களின் தந்திகளைப் பத்தி பத்தியாய் வெளியிடும். அம்மட்டோ! ஒரு விஜயராகவாசாரியார் அமெரிக்காவுக்குச் சென்று தன்மகள் வெள்ளைக்காரப் பெண்களைப் போன்று மயிர் கத்தரித்துக் கொள்ள விரும்புகின்றாள்; இந்தியாவில் தென்னமரமிருக்குமட்டும் குடியை நிறுத்தமுடியாது என்று பேசுவாராயின், உடனே இப்பார்ப்பனப் பத்திரிகைகள் மனமகிழ்ச்சியுடன் இவைகளை எல்லாம் வெளியிடுகின்றன. சாஸ்திரிகளைக் குறித்தும், ஆச்சாரிகளைப் பற்றியும் இவ்வளவு புகழ்ந்தெழுதிய பார்ப்பனப் பத்திரிகைகள் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு இந்தியர்கள் சம உரிமையுடன் நடாத்தப்படல் வேண்டுமென வாதாடிய திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் பயணப்பட்டதைக் குறித்தும், அவர் ஆங்கு நிகழ்த்திய அரும்பெரும் சொற்பெருக்குகளைக் குறித்தும் யாதொன்றும் வெளியிட்டனவல்ல. திரு சண்முகம் செட்டியார் கனம் சாஸ்திரிகளைப் போன்று இந்தியர்கள் பணத்தில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று, இந்தியர்கள் பிறப்புரிமையை விற்றனரல்லர். அவர் ஆஸ்திரேலியாவுக்குத் தம் சொந்தச் செலவில் பயணப்பட்டு, அங்கு இந்திய மக்களின் நாகரீகத்தை எடுத்துரைத்து,

"பொதுவாக கறுப்பு மனிதர்கள் தாழ்ந்தவர்களென்றும், அதிலும் முக்கியமாக இந்தியர்கள் தாழ்ந்தவர்களென்றும் பேசுகின்றவர்களுக்கு எங்களுடைய புராதனமான நாகரீகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. தாழ்ந்தவர்கள் என்று சொல்வதைக்கூட எங்கள் ஜனங்கள் எவ்வளவு பலமாக வெறுக்கிறார்கள் என்பதை நீங்கள் உணரவில்லை போலும். பக்தி வாய்ந்த கிறிஸ்தவர்களடங்கிய கூட்டத்தில் பேசுவதாக நான் நம்புகிறேன். ஏசுநாதர் கறுப்பு மனிதரைப் பற்றி என்ன கூறினார் என்பதை உங்களுக்கு நான் எடுத்து ஞாபக மூட்டட்டுமா? இப்படியிருக்க ஒரு தனிப்பட்ட நபர் அல்லது ஜாதியார் இவர்களின் நிறத்தால் எப்படி ஏற்றத் தாழ்வு வந்துவிடுமென்று நீங்கள் கூறக்கூடும்? 3 கண்டங்களின் போர்க்களங்களில் எங்களுடைய வீரர்கள் உங்களுடைய வீரர்களுடன் தோளோடு தோள் கொடுத்து நின்று எதிரிகளுடன் வீரமாகப் போராடி மடிந்திருக்கிறார்கள். (கரகோஷம்) உங்களுடன் மடிவதற்குச் சமமாக இருக்க இலாயக்குள்ள நாங்கள் உங்களுடன் சமமாக வாழ்வதற்கும் தகுதியுடையவர்களல்லவா?

- பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பல பெரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றது.

கலைகளிலும் நாகரீகங்களிலும் வித்தியாசப்பட்ட பல ஜாதியர்களிலும் ஒருங்கு சேருவதற்கு அது சந்தர்ப்பத்தை அளித்ததே என் மனதிற்கு எல்லாக் காரியங்களையும்விடச் சிறந்ததாகும் என நான் நினைக்கின்றேன். (சபாஷ்! சபாஷ்!!) ஏகாதிபத்தியத்திற்குள் இந்தியா இருந்தால் தான் அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படும். ஆட்சி பெற்றுத் திருப்தியுடன் இருந்துவரும் இந்தியாதான் ஏகாதிபத்தியத்திற்கு மிக்க பலத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும். ஏகாதிபத்தியமானது உன்னதமான இலக்ஷியங்களுக்காக ஏற்பட்டிருக்கின்றது. அதற்குச் சிறந்த சம்பிரதாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சிறந்த இலக்ஷியங்களையும் இப்புனிதமான சம்பிரதாயங்களையும் ஏற்றுப் பாதுகாக்கின்றவர்கள் என்ற பெருமை எங்களுக்கும் உண்டாகும்படி செய்யுங்கள். இதுதான் எங்களுடைய பெரிய அவா. இது விஷயத்தில் நீங்கள் அனுதாபங்கொண்டு யோசிக்க வேண்டும். நான் உங்கள் நாட்டைவிட்டு இந்தியாவிற்குச்சென்று அன்பும் சுதந்திர தாகமும் கொண்ட ஆஸ்திரேலியர் இந்தியர்களுடன் சினேகமாக வரத்தயாராக இருக்கிறார்கள் என்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அங்கத்தினராக இருப்பதற்குரிய பொறுப்புகளை ஏற்பதுடன் அதற்குள்ள உரிமைகளில் கலந்துகொள்ளவும் சந்தோஷமாக அழைக்கிறார்கள் என்றும் இந்தியரிடம் கூறி, உங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிக்கலாம்."

என்று இந்திய மக்கள் சமத்துவமாய் நடாத்தப்படல் வேண்டுமெனப் பேசியிருக்கின்றார். அவரைப்பற்றி ஆஸ்திரேலியா பத்திரிகைகள் புகழ்ந்து பேசியிருக்க, இத்தென்னாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகள் ஒன்றும் எழுதினவல்ல. திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவராய் இருந்தும், பார்ப்பனப் பத்திரிகைகட்கு அவரைக் குறித்து எழுத மனமில்லை. காரணமென்? திரு ஆர். கே. சண்முகம் செட்டியார் பார்ப்பனரல்ல; அவர் பார்ப்பனரல்லாதார். (திராவிடன்.)

---

## மைடான் டில்லி

நாளிது அக்ஷய ஆண்டு ஐப்பசி திங்கள் 19-ஆம் நாளன்று காலை 10-மணிக்கு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கரு. சும. அவர்கள் கிட்டங்கியில் உயர் திருவாளர் இலக்குமணச் செட்டியாரவர்கள் தலைமையில் மகாத்மா சங்கத்தின் ஆறுவது கூட்டம் கூடிற்று. அவ்வமயம், மாணாக்கர்களால் கடவுள் வாழ்த்து, தேசிய வாழ்த்து பாடிய பின்னர் திருவாளர்களான அரு. சொ. திட்டாணிச் செட்டியாரவர்களும் அழ. சுப. காசிவிஸ்வநாதன் அவர்களும் அழ. கரு. சோமசுந்தரம் செட்டியாரவர்களும் கரு. பெரி. பெரியையா அவர்களும் கரு. சும. சோமசுந்தரன் அவர்களும் ராம. ராம சின்னமுத்து அவர்களும் (பிஞ்சை) முரு. அ. அருணாசலம் பிள்ளையவர்களும் தீ. சொ. மாணிக்கம் அவர்களும் முறையே "பெண்களும் கப்பல் பிரயாணமும்" "கேள்விமுயல்" "இந்தியாவின் நிலைமை" "யாருக்காக நாம் வாழ்வது" "நமது கடமை" "பூர்வ மதத்தின் உண்மை" "இன்சொல்" "அடக்கமுடைமை" ஆகியவற்றை மகுடமாகக் கொண்டு பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றியும் சுதந்தரத்தைப் பற்றியும் உடல் வளத்தைப்பற்றியும் பிராமணீயத்தை ஒழிப்பது பற்றியும் ஏலச் சீட்டின் கேட்டைப் பற்றியும் தக்க சான்றுகளுடன் கேட்போர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படி உருக்கமாக பிரசங்கமாரி பொழிந்தார்கள். இடை இடையே திருவாளர்களான வீரய்யன், சீனி இவர்களால் சுதேசகீதங்கள் இனிமையாகப் பாடப்பெற்றன. முடிவில் தலைவரவர்கள் சொற்பொழிவுகளைப்பற்றிய தமது கருத்தையும் உபந்நியாசகர்கட்கு வந்தனமும் கூறினார்கள். பின்னர் கரு. சும. சோமசுந்தரனால் தலைவர்கட்கும் சபையோருக்கும் வணக்கம் சொல்ல "மகாத்மா வாழ்க" "ஆடுகோழி நீடூழி வாழ்க" என்னும் மாபெருமுழக்கத்திடையில் அவையினருக்கு சந்தன தாம்பூலம் வழங்க கூட்டம் பகல் ஒரு மணிக்கு இனிது நிறைவெய்தியது. அன்று அந்நிய உடை புனைந்திருந்த சிறு கூட்டத்தினர் வெட்கித் தலைகுனியும்படி பெரும்பான்மையோர் சுதேச உடையே உடுத்தி இருந்தமை பெரிதும் போற்றத்தக்கதாகும். சுபம்.

ஓர் தமிழன்.

## சந்தா நேயர்களுக்கு.

நமது "குடி அரசு" பத்திரிகை சரிவரக் கிடைப்பதில்லையென்று நூற்றுக்கணக்கான சந்தாதாரர்கள் குறைகூறி அடிக்கடி எழுதிக் கொண்டே வருகிறார்கள். நாங்கள் யாதொரு தடையும் தாமதமுமின்றி கிரமமாய்ப் பத்திரிகைகளை அனுப்பிக்கொண்டுதான் வருகிறோம். நேயர்கள் கூறும் குறைகளுக்குற்ற காரணங்கள் எமக்கு விளங்கவில்லை.

தயை கூர்ந்து அந்தந்தத் தபாலாபீசுகளின் போஸ்ட்மாஸ்டர்களுக்கு, குறை கூறும் நேயர்கள் எழுதிக்கேட்டு எமக்கும் அறிவித்தால் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துத் தக்க ஏற்பாடுகள் செய்ய இயலும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்)

## ஈரோடு தமிழ்ச் சங்கம்.

1926-ஞ நவம்பர்-மீ 28- ஞாயிற்றுக் கிழமை மாலை 5-30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் ஷெ சங்க மேல்மாடியில் உபய வர்சரித்திரம் (தொடர்ச்சி) ஸ்ரீமான் க. சிவ கிருஷ்ணசாமி நாயக்கரவர்களால் உபந்யாசிக்கப்பெறும் எனவும் பிரதி சோம, சுக்கிர வாரங்கள் தோறும் திருக்குறள் வியாக்கியானம் செய்யப்பெறும் எனவும் காரியதரிசி ஸ்ரீமான் பி. பொன்னுசாமி செட்டியார் அறிவிக்கிறார்.

# பார்ப்பன காங்கிரசின் பாதகச்செயல்

## பனகால் அரசர்பேரில் வசை புராணம் பாடுத்தல்:

பத்திராதிபர் "குடி அரசு"

ஐயா,

தங்கள் செல்வாக்குள்ள பத்திரிகையில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னை நகரவாசிகளின் பொதுக்கூட்டமென்று சூழ்ச்சியாக சுயராஜ்ய கட்சியெனும் பார்ப்பன காங்கிரஸ் வாதிகள் பனகால் வேண்டாம் என்று சொல்வதற்காக ஓர் கூட்டம் 24-11-26 புதன்கிழமை மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடினார்கள். அக்கூட்டத்திற்கு வேடிக்கை பார்க்கச் சென்றிருந்தவர்களில் நானும் ஒருவன்.

அது "வயதில் முதிர்ந்த" குழந்தையினால் அக்கிராசனம் வகிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் பெரும்பாலான பிராமணர்களும், அவர்களது காங்கிரஸ் தொண்டர்களும், மில் தொழிலாளர்களுமே நிரம்பி இருந்தனர்:

அக்கிராசனர் தமது முகவுரையில் அகில இந்திய பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ், தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் இவைகளுக்குத்தலைவரும், சென்னை மாகாண பிரதம மந்திரியுமான கனம் பனகால் அரசருக்கு வாய்கொண்டமட்டும் வசைமாலை சூட்டினர். அதற்கு உஞ்சைவிருத்தி பார்ப்பான் முதல் உத்தியோக பார்ப்பான் வரையில் கரம்கொட்டி சிரக்கம்பஞ் செய்தனர். அதுவுமன்றி அக்கிராசனர் மே. த. கவர்னர் அவர்கள் பனகாலுக்கு பிரதம மந்திரி பதவி வழங்கி பனகால் ஆட்சி ஏற்படும் பட்சத்தில், பட்டண முழுவதும் இரத்த ஆறு ஓடுமென்றும் கோஷன் பிரபு அவர்களுக்கும் கெட்ட பெயர் கிடைக்குமென்றும் பயமுறுத்தினர். மந்திரி பதவி வெளவால் கட்சிக்கே வழங்கவேண்டுமென்றும் வாய்ப்பறை சாற்றி ஆசனத்திலமர்ந்தார்:

பிறகு வெம்பிளி எக்ஸிபிஷனுக்குச் சென்றுடிய ஒரு நடிகர் அட்டகாசத்துடன் அரங்கத்தில் தோன்றினர். மகாபுண்ணிய சீலரும் மேதாவியும் நாட்டின் நலமொன்றுக்கே அல்லும் பகலும் உழைத்தவரும், தியாகியும், ராஜீயஞானம் மிக்லாக நிரம்பெற்றவரும் காங்கிரசில் காலங்கண்டவரும் காலணாகூட கைநீட்டி யாரிடமும் வாங்காதவருமாகிய நாவலர் மெச்சும் பாவலர் தமது திருவாக்கிலிருந்து "சண்டாளனாகிய பனகாலை ஒழிக்கவேண்டும். அவனுடைய ஆட்சியை அடியோடி அழிக்கவேண்டும்" என்று ஆவேசத்தோடு திருவாய் மலர்ந்தருளினர்.

பனகால் ஆட்சியை ஸ்திரமாக ஸ்தாபிப்பதற்கு ஜஸ்டிஸ் பத்திரிகையும், திராவிடனும் பாட்டு பாடுகின்றன. "குடி அரசு" தாளம் போடுகிறது என்றும் அவைகளையும் தாக்கி பேசினர். அன்னவர் இந்த அவசரத்தில் சேலம் ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடு அவர்களையும் மறந்துவிடவில்லை; ஆந்திரா யூனிவர்சிட்டியில் தமக்கு டாக்டர் பட்டமாவது கிடைக்காதா என்று ஸ்ரீமான் நாயுடு அவர்கள் பக்கபலமாக இருக்கிறார் என்றும் கூறினர். "குடி அரசை"ப்பற்றியும் அவரால் குறைகூறாமல் இருக்கமுடியவில்லை. "ஜஸ்டிஸு"க்கும் "திராவிடனு"க்கும் கிடைத்தது அளவே இல்லை:

பாவலருக்குப்பின் வி. எல். சாஸ்திரி என்ற பார்ப்பனர் ஒருவர் அளவுமீறி பனகால் அரசரை கேட்போர் மனம் பதைக்கும் மொழிகளாலும் வாய்கூசும் வார்த்தைகளாலும் அலங்கரிக்கத் தொடங்கினர். இவர்பேசிக்கொண்டு வரும்பொழுது சில பார்ப்பனர் பனகாலுக்கு ஷேம்!(வெட்கம்)என்று கூக்குரலிட்டனர். இவ்வளவு காலம், கர்ணகடூரமான வார்த்தைகளை சகித்துக்கொண்டும் வரும் ஆத்திரத்தை உள்ளடக்கிக்கொண்டும் சாந்தசீலராய் நாலாபக்கங்களிலும் வீற்றிருந்த சில பார்ப்பனரல்லாதார் தங்களையும் மறந்தவர்களாய் அன்பின் வழியே பனகால் அரசருக்கு ஜே! என்று வாய்விட்டு கூறினர்.

இதற்குள் அக்கூட்டத்தில் வீற்றிருந்த காங்கிரஸ் தலைவர்களும் முக்கியமாக ஸ்ரீமான் டி. எஸ். அனந்தராமையர் என்பவரும் காருண்யம் பொருந்திய மகாத்மா காந்தி அவர்களின் ஆணையாகிய அஹிம்சா தர்மத்தை அறவே கைவிட்டு அருகிலிருந்த தடிகளோடு கூடிய காங்கிரஸ் வாலண்டியர்களையும் வேண்டுமென்று பணம்கொடுத்து வரவழைத்து வைத்திருந்த கூலிக்கு மாரடிக்கும் கோடாரிக்காம்புகளான "ரௌடி" ஆட்களையும் ஏவினர்: தொல்லைபாதகர்களான அவர்களும் கொஞ்சங்கூட ஈவு இரக்கமில்லாமல் கூட்டத்தின் ஒரு பக்கமாக விழுந்துசென்று நிரபராதிகளும் நிராயுதபாணிகளுமான நம் பார்ப்பனரல்லாதாரை தடிகளைக்கொண்டு அடித்தும் மணலைவாரிக் கண்களில் கொட்டியும் தாக்கினர். அத்துடன் நில்லாமல் அதில் ஒரு பிராமணரல்லாத வாலிபரை பிடித்து அநேகராய்ச்சேர்ந்து பேச்சுமூச்சில்லாமல் நையபுடைத்து காங்கிரஸ் தலைவர்களின் உத்திரவின் மேல் பிரேதம்போல் மூர்ச்சையற்றிருக்கும் அவ்விளைஞரை பிரசங்கமேடைக்கு கொண்டு சென்றார்கள். அம்மேடையின் மீது தலைவர் உத்திரவுப்படி அஹிம்சையை அடித்து கொன்றுவிட்டோம் என்றுகூறி அனைவருக்கும் காட்டும் பாவனைபோல் ஸ்மரணை அற்றுக்கிடக்கும் அவ்வாலிபரின் மயிரைப்பிடித்து தூக்கி எல்லோருக்கும் காட்டினர்.

அவ்வமயம் அவ்விடத்தில் செத்துப்போன பாம்பை அடிக்கும் சூரனாகிய ஒரு தீரர் அவ்விளைஞனை எட்டி இடுப்பில் உதைத்தார். ஒருவர் ஸ்ரீனிவாசய்யங்காருக்கு ஜே! என்று சொல்லடா என்று கன்னத்தில் குத்தினார். கைகால்கள் சோர்வடையப்பெற்றும், கண்கள் மூடப்பட்டும், வாயினின்றும் மூக்கினின்றும் இரத்தமானது ஆறுபோல் பெருகப்பெற்றும், வஸ்திரங்களெல்லாம் கிழிந்து இரத்தக் கறைகளால் நிரம்பப் பெற்றும் சுவாதீனமில்லாமல் மூர்ச்சையுற்றிருக்கும் அவ்வாலிபரின் கோரகாட்சியை கண்டமாந்தர்கள் உள்ளமும் மனமும் துடித்தவர்களாய் பரிதபிக்கலாயினர் அந்தோ! இந்தப் பார்ப்பனர்களின் அட்டூழியங்களும் அவர்களைச் சேர்ந்த கோடாரிக் காம்புகளின் அக்ரமங்களும் என்னே! என்றும் சிலர் வாய்விட்டு கதறினர். அப்போது பார்ப்பனர்களின் எண்ணமும் பலிக்காமல் அவ்விடத்தில் ஒரே குழப்பமாகி பிரசங்கமும் கலைந்து விட்டது பாவம்; பலத்த காயமடைந்திருக்கும் வாலிபரையும் அவர்கள் நிராதரவாய் விட்டு செல்லத் தலைப்பட்டனர். அவ்வமயம் ஒரு புண்ணிய சீலர் அவ்வாலிபரை ஓர் ரிக்ஷா வண்டியில் போட்டுக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர். பின்னால் கேள்விப்பட்ட போதும், பத்திரிகையில் பார்த்த போதும் அவர் ஜனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சிகிச்சையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது. இப்பால் கூட்டம் கலைந்தது. செல்லும் மாந்தர்கள், சட்ட சபை எலெக்ஷனில் சொற்ப ஸ்தானங்கள் கிடைக்கப்பெற்றதற்கே இந்த பார்ப்பனர்கள் இப்படி அக்கிரமஞ் செய்து அட்டகாசம் புரிகிறார்களே! ஒரு சமயம் சுயராஜ்யமே இவர்கள் கையில் வந்து விட்டால் தேச மக்களை என்ன பாடு படுத்துவார்களோ அப்பப்பா! பயமாயிருக்கிறது! என்று வார்த்தை ஆடிக்கொண்டுசென்றனர்

ஆதலால் திராவிட மக்களே! தமிழ்த்தாயின் சேய்களே! சுயமரியாதைக்கு பாடுபட எழுமின் இனியாவது போலி காங்கிரஸ் வாதிகளான பார்ப்பனர்களின் மாயவலையில் சிக்காமல் சுயமரியாதைக்காகப்பாடு படும் ஜனநாயக கட்சியான ஜஸ்டிஸ்கட்சி அபிவிருத்தியடைய ஆதரவளியுங்கள். ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களின் அரும் மொழிகளுக்கு செவிசாய்த்தருளுங்கள். பார்ப்பனீயத்தைவேருடன்களைந்தெறியுங்கள்! ஜஸ்டிஸ், திராவிடன், குடி அரசு முதலிய பத்திரிகைகளை தமிழ் நாடு முழுவதும் பரவும்படி செய்யுங்கள். தலைவர்களே! நீங்களும் காலதாமதமில்லாமல் வந்து நின்று சுயமரியாதைக்காக தீரத்துடன் போராடி வெற்றி பெறுங்கள். எல்லோருக்கும் நீண்ட ஆயுளையும் குன்றாத வலிமையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தைரியத்தையும் மாறாவெற்றியையும் அளிக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றனன்.

திராவிடச்சேய்.

---

## வைக்கம்.

அக்ஷய-ஹு கார்த்திகை-மீ 12-உ சனிக்கிழமை வைக்கத்தில் நடந்தேறிய அஷ்டமி உற்சவம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. அதில் காலை 7 மணிக்கு சில ஈழுவர் என்னும் ஜாதியார் கோவிலுக்குள் பிரவேசித்துச் சாமி தெரிசனம் செய்து வரும்பொழுது, சிலரை போலீஸ்காரர்களும் ஊர் ஜனங்களும் சேர்ந்து அடித்து பெரிய கலவரமுண்டாக்கினார்கள். கூட்டம் ஏராளமாயிருந்ததினால் ராத்திரிக் காலத்தில் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காலையில் ஒரு வாசல் பக்கம் ரகளை நடக்க மற்றொரு வாசல் பக்கம் இன்னும் சில ஈழுவர்கள் உள்ளே நுழைய இம்மாதிரி பத்து மணிவரை நடந்து கொண்டிருந்தது. இதில் சில நாயன்மார்களையும் ஈழுவர்கள் என்று எண்ணி அடித்து இம்சித்தார்கள். இன்று ராத்திரிக்கு என்ன கலவரம் நடக்குமோ தெரியாது. கடவுள் தான் இவர்களுக்குத் துணை. கவர்ன்மெண்டார் இதைக் கவனிக்கிறதில்லை. அப்படி அவர்கள் கோவிலுக்குள் பிரவேசித்தால் அவர்களை விசாரணை செய்து தண்டனை செய்யவேண்டியது சட்டமாயிருக்க, இம்மாதிரியெல்லாம் அடித்து இம்சை செய்வது அந்த வைக்கம் பெருந்துறைக் கோவிலப்பனுக்கே பொறுக்காது. அவர்களை அடிக்கும் பொழுது பார்த்தவர் கண்களில் நீர் ததும்பிற்று. அவர்களுக்கு விழுந்த அடியைக் கண்டு கல்நெஞ்சமுடையவர் மனதும் கரைந்துவிடுமென்பது திண்ணம். கடவுள் என்றால் எல்லோருக்கும் ஒரே ஒருவர்தான். மனிதரென்றால் எல்லோரும் மனிதர்தானே. நந்தனை பல்லோரும் பறையன், பறையன் என்று கோவிலுக்குள் விடாமல் தடுத்தார்களே பின்னும் ஆண்டவனுடைய அனுக்கிரகத்தால் உள் நுழையவில்லையா? அதுபோல இந்த வைக்கத்தப்பன் மனமிறங்கி இவர்களை உள் அழைத்துக்கொண்டால் இந்தப் பார்ப்பனர்கள் என்ன செய்வார்கள்? இது ஏன் இவர்களுக்கு புத்தியில்லாமல் போயிற்று.

ஒரு வழிப்பிரயாணி.

# ஆஸ்திரேலியாவில் திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியார் நிகழ்த்திய சொற்பெருக்கின் விபரம்.

## இந்தியாவின் கோரிக்கை

மெல்பொர்ன்பிடால் பார்லிமெண்ட் கூட்டத்திலுள்ள, குவீன்ஸ் ஹால் என்ற விடத்தில் 26—10—26 யன்று இரவு ஆஸ்திரேலிய கவர்ன்மெண்டாரும் மாகாண கவர்ன்மெண்டாரும் அயல் நாடுகளிலிருந்து ஏகாதிபத்திய பார்லிமெண்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்து நடத்தினார்கள். மந்திரிகளையும் பிரபலஸ்தர்களையும் சேர்த்து சுமார் 250 விருந்தினர்களுக்கு மேல் பிரசன்னமாக இருந்தார்கள். ஆக்டிங் பிரதம மந்திரியான டாக்டர் பேஜ் அவைத் தலைமை வகித்தார். மண்டபம் மிக்க உயரமானதாக இருந்தது. அதில் பல ஆஸ்திரேலிய ராஜ தந்திரிகளின் படங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. இம்மண்டபத்தில் சரித்திரத்திலேயே முக்கியமாகக் கருதப்படும் கூட்டங்கள் பல நடை பெற்றிருக்கின்றன. ஆனால் நேற்றைக் கூட்டத்தைப் போன்று ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட பல பிரதிநிதிகளடங்கியதாயும் பரஸ்பர அன்பும் நட்பும், தன் கையே தனக்குதவி என்ற கோட்பாடுகளை மிகுதியாகக் கொண்டதாயும் உள்ள கூட்டம் எதுவுமே இதற்கு முன்பு நடந்ததில்லை. ஆக்டிங் பிரதம மந்திரி விருந்தினர்கள் நீடூழிகாலம் வாழவேண்டுமென்று பிரார்த்தனை செய்து மதுபான மருந்தினர். விக்டோரியா மாகாணப் பிரதம மந்திரியும் பிடரல் பார்லிமெண்டிலும் மாஹாணப் பார்லிமெண்டுகளிலும் உள்ள கவர்ன்மெண்ட் எதிர்தரப்புத் தலைவர்களும் அதனை ஆதரித்துப் பேசினார்கள். பிரதிநிதிகளின் சார்பாக லார்டு சாலிஸ்பரியும் (பிரிட்டன்) கனம் தாமஸ் ஸ்மார்ட்டும் (தென்னாப்பிரிக்கா) ஸ்ரீமான் ஷண்முகஞ் செட்டியாரும் (இந்தியா) பதிலளித்தார்கள், ஸ்ரீமான் சண்முகம் செட்டியாருடைய பிரசங்கத்தைப்பற்றி "ஹெரால்டு" என்ற பத்திரிகை எழுதுகையில் கூறியதாவது :—

ஸ்ரீமான் ஷண்முகஞ் செட்டியாருடைய பிரசங்கம் மிக்க வெளிப்படையானதாகவும் ஆண்டகைமையுடன் கூடியதாகவும் இருந்தது. அவர் வெகு அழகாகப் பிரசங்கம் செய்தார். அவர் விஷயங்களை நன்கு சீர்தூக்கிப் பார்த்தே பேசினார், கூட்டங்கலைந்தபொழுது ஸ்ரீமான் செட்டியாரை ஆஸ்திரேலியா வெள்ளையர் மயமாகவிருக்க வேண்டுமென்று வாதிப்பவர்கள் கூட சூழ்ந்து கொண்டு பாராட்டினார்கள்.

### ஸ்ரீமான் ஷண்முகஞ் செட்டியாரின் பிரசங்கம்.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் செய்த பிரசங்கத்தின் விவரம் வருமாறு.—

ஏகாதிபத்தியப் பார்லிமெண்ட் அங்கத்தினர் கூட்டத்திற்கு வந்திருக்கும் பிரதிநிதிகளின் விஜயம் மிக்க முக்கியமானதென்று அடிக்கடி கூறப்பட்டிருக்கின்றது. உங்களுடைய ஜனங்கள் விருந்தினர்களை உபசரிக்கும் பான்மை எங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கின்றது. உங்கள் நாட்டின் இயற்கை வனப்பு எங்கள் மனதை கொள்ளை கொண்டிருக்கின்றது. உங்கள் நாட்டில் ஏராளமாக மூலாதாரப் பொருள்கள் இருப்பதைக் குறித்து நீங்கள் பெருமை கொள்ளுவது நியாயமே. அவையும் எங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கின்றன. இம்மகத்தான சுற்றுப் பிரயாணத்தின் காரணமாக எங்கள் மனப்பான்மை விசாலமடைந்திருக்கின்றதென்றும், ஏகாதிபத்தியத்தினுடைய பிரச்சினைகளையும் எங்கள் நாடுகளுடைய பிரச்சினைகளையும் நீங்கள் நன்கு உணரும்படி நாங்கள் செய்திருக்கின்றோமென்றும் நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம். நாங்கள் இங்கு விஜயம் செய்திருக்கும் சமயத்திலேயே லண்டனில் ஏகாதிபத்திய மகாநாடு கூடியிருக்கிறது. இது அதிர்ஷ்டவசமான சம்பவமாகுமென்று நான் கருதுகிறேன். (சபாஷ் சபாஷ்) ஏகாதிபத்திய பிரதம மந்திரிகள் மகாநாட்டைப்போன்று நம்முடைய கூட்டமும் பிரதிநிதித்துவ முறையை எடுத்துக் கொண்டு ஆலோசித்துப் பார்த்தால் அவ்வளவு முக்கியமானதுதான் என்று நான் துணிந்து கூறுவேன். நான் இவ்வாறு கூறுவதால் அங்கு கூடியுள்ள பெரிய ராஜதந்திர நிபுணர்களை அவமரியாதை செய்ததாக எவரும் கருதக் கூடாது. கட்சிக் குரோதங்கள் இல்லாமல் ஏகாதிபத்தியத்தில் பொது க்ஷேமத்தையே மனதிற் கொண்டு நாங்கள் ஆஸ்திரேலியப் பிரச்சினைகளைச் சிறிது தெரிந்துக் கொள்ளுவதற்காகவும் எங்களுடைய தேசங்களில் எங்களால் தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகளில் சிலவற்றையாவது நீங்கள் உணரும்படி செய்வதற்காகவும் இங்கு வந்திருக்கின்றோம்.

எங்கள் நாடான இந்தியாவைப் பற்றி எவரும் சிறிதாவது அறிந்து கொள்ளுவதில்லை. ஆனால் அதன் விஷயங்களைப் பற்றியும் அடிக்கடி அயல் நாட்டினர் தப்பான விஷயங்களை கிரஹித்துக் கொள்ளுகின்றனர். இத்தன்மை வாய்ந்ததொரு நாட்டிலிருந்து வருவதால் இந்த விஜயத்தின் மூலம் என் நாட்டில் நடைபெறுகின்ற விஷயங்களைப் பற்றி உங்களுக்குச் சிறிது எடுத்துரைக்க சந்தர்ப்பம் கிடைத்ததைப் பற்றி நான் சந்தோஷங்கொள்ளுகின்றேன். இந்தியாவிற்கு வெளியிலுள்ள ஜனங்களில் வெகு சிலரே இந்தியரின் சரித்திரம் கலைகள் அபிலாஷைகள் இவற்றைத் தெரிந்து கொள்ள உண்மையில் சிரத்தை கொள்ளுகின்றனர். இது மிக்க வருந்தத் தக்க விஷயமாகும். இந்தியாவிலுள்ள நிலைமையைத் தப்பாகக் கிரஹித்துக் கொண்டு அதனைத் திரித்து எடுத்துரைப்பது சகஜமாக இருந்து வருகிறது. உங்களுடைய பிரபல் பொது ஜனத் தலைவர்களுள் ஒருவருடன் இது விஷயமாக வாதிக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அவர் ஆஸ்திரேலியா வெள்ளையருக்கே உரியது என்று உங்களுடைய கொள்கையினால் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றதென்றும், அதனால் ஆஸ்திரேலியரில் சிலர் கூட இந்தியா விஷயத்தில் எவ்வித சிரத்தையும் கொள்ள முடியாதிருக்கிறதென்றும் கூறினார். அக்கொள்கை புத்திசாலித்தனம் வாய்ந்ததா இல்லையா என்பதைப்பற்றி முடிவு கூற எனக்குச் சற்றும் யோக்கியதை கிடையாது. ஆனால் அக்கொள்கை சம்பந்தமாக எங்களுடைய மனோபாவம் யாதென்று நான் உங்களுக்கு எடுத்துச் சொன்னால் அது எல்லோருக்குமே நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். ஒவ்வொரு குடியேற்ற நாடும் தனது பிரஜைகள் எத்தன்மை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற விஷயத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் உரிமை உண்டென்று உணர்ந்திருப்பதற்கறிகுறியாகக் கூடும் ஏகாதிபத்திய மகாநாட்டின் தீர்மானப்படி நாங்கள் குடியேறுவதைத் தடுக்க உங்களுக்குள்ள உரிமையை நீங்கள் எப்படி அங்கீகரிக்கின்றீர்களோ அப்படியே நாங்களும் உங்கள் நாட்டில் குடியேறுகிறவர்களைத் தடுக்க உங்களுக்கு உரிமை உண்டென்பதை நாங்களும் அங்கீகரிக்கின்றோம். ஆனால் மேற்கண்ட தீர்மானத்துடன் தொடர்ச்சியாக நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானப்படி நீங்களும் சுய ஆட்சி பெற்றுள்ள இதர குடியேற்ற நாடுகள் ஒவ்வொன்றும் நடக்க வேண்டுமென்று தான் நாங்கள் கோருகின்றோம். குடியேற்ற நாடுகளில் சட்டப்படி குடியேறியுள்ள இந்தியர்களுக்கு அசௌகரியங்களை உண்டாக்கியிருப்பது ஏகாதிபத்தியத்தின் ஒற்றுமைக்கு உகந்த காரியமாகாதென்று அத்தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஏகாதிபத்திய மகா நாட்டுத் தீர்மானத்தின் அந்தப் பாகத்தை நீங்கள் பூரணமாக ஏற்று இந்நாட்டைத் தங்கள் வாசஸ்தலமாகச் செய்துகொண்ட இந்தியர்களுக்கெல்லாம் பூரணமான பிரஜா உரிமை அளிக்க வேண்டுமென்று இந்தியா எதிர்பார்க்கின்றது என்று நான் கூறுகின்றேன். இது மிகைப்பட்ட கோரிக்கையாகாதென்பதை நீங்களும் ஒப்புக்கொள்ளுவீர்கள். இவ்விஷயத்தில் உங்கள் மீது நாங்கள் சிறிதுகூட புகார் செய்ய இடமில்லாதிருப்பதைக் கண்டு நான் சந்தோஷப்படுகின்றேன். பிடரல் பார்லிமெண்ட் இந்நாட்டில் குடியேறிய இந்தியர்களுக்கு வாக்குரிமையளித்ததையும் அவர்கள் வயோதிகர்களாகவும் வேலை செய்யச் சக்தியற்றவர்களாகவும் போனால் அக்காலத்தில் இதரர்களைப்போல கவர்ன்மெண்டாரிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற உரிமையளித்ததையும் முன்னிட்டு நாங்கள் எங்கள் மனமார்ந்த நன்றியை உங்களுக்கு இச்சபையில் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம் (கரகோஷம்) பிடரல் பார்லிமெண்ட் காட்டிய சிறந்த வழியைப் பின்பற்றி தங்கள் மாகாணத்திலுள்ள இந்தியர்களுக்கு இத்த

...ய உரிமைகளை அளிக்காமலிருக்கும் குவீன்ஸ்லாண்டு பார்லிமெண்டும் மேற்கு ஆஸ்திரேலிய பார்லிமெண்டும் வழங்குமென்று நான் நம்புகின்றேன்.

என் நாட்டாரிடையே வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனால் இந்த வித்தியாசம் அடிக்கடி அனாவசியமாக மிகை படுத்திக் காட்டப்படுகின்றது. நான் இதைப்பற்றி நினைக்கும் பொழுது ஆங்கிலேயருக்கும் ஸ்காட்லாந்து வாசிகளுக்கும் இருக்கும் வித்தியாசத்தைவிட எங்கள் வித்தியாசம் அதிகமானதா என்ற விஷயத்தில் சந்தேகம் தோன்றுவது உண்டு. (நகைப்பு) லண்டன் ஆஸ்பத்திரியில் நடந்ததாகக்கூறப்படும் ஒரு சம்பவத்தைப்பற்றி உங்களில் சிலர் கேட்டிருக்கக்கூடும். அது வருமாறு:— லண்டன் ஆஸ்பத்திரியில் ஸ்காட்லாந்து வாசியான ஒரு நோயாளி மரணத்தருவாயிலிருந்தான். அவன் தான் இறக்கு முன்பு தனது தேசத் துணைக் கருவியான "பாக்கைப்" என்ற வாத்தியம் வாசிக்கப்படுவதைக் கேட்க விரும்புவதாகக் கூறினான். உடனே அக்கருவி கொண்டு வரப்பட்டு வாசிக்கப் பட்டது. இதை வாசித்ததும் ஸ்காட்லாந்து வாசியான நோயாளி பூரணமாக குணமடைந்து பிழைத்துக்கொண்டான். ஆனால் அவனுடனிருந்த ஆங்கிலேய நோயாளிகள் எல்லாம் இறந்துபோய் விட்டனர் [நகைப்பு] எங்களுள் உள்ள வித்தியாசம் இவ்வளவு அதிகமானதாயும் முக்கியமானதாயும் இருக்கவில்லை என்று நான் நம்புகிறேன். (நகைப்பு]

எங்களுடைய வித்தியாசங்கள் மிகை படுத்திக் கூறப்படுவது மாத்திரமின்றி எங்களுடைய தேசிய அபிலாஷைகளும் அடியோடு திரித்துக்கூறப்படுகின்றன. எங்களுடைய தேசிய அபிலாஷைகள் திரித்துக் கூறப்படுகின்றன என்பதற்கு நான் ஒரு நல்ல உதாரணம் காட்ட விரும்புகின்றேன். அது தான் செயிண்ட் பால்ஸ் கதீட்ரலைச் சேர்ந்த டீன் இஞ்ஜ் என்ற பாதிரியார் தமது புத்தகத்தில் எழுதியிருக்கும் ஒரு வாக்கியமாகும்.

பூஜ்யரான அப்பாதிரியார் "அடுத்த முறை ஏகாதிபத்தியத்திற்குப் பெரிய ஆபத்து நேரிடும்பொழுது இந்தியாவின் மனோபாவம் கருத்ததாகத்தானிருக்கும். [அதாவது ஏகாதிபத்தியத்தின் உதவிக்கு வருமென்பது சந்தேகிக்கத்தகுந்த விஷயம்தான்]" என்று தமது புத்தகத்தில் எழுதியிருக்கின்றார்

ஆஸ்திரேலியாவின் மனோபாவம் எவ்வளவு தூரம் சந்தேகிக்கக் கூடாததாக இருக்குமோ அவ்வளவு தூரம் இந்தியாவின் மனோபாவமும் சந்தேகிக்கக் கூடாததாக இருக்குமென்று நான் உறுதிகூறத் துணிகிறேன். [கரகோஷம்] சந்தேகமே உருவெடுத்த அப்பாதிரியாரின் யோசனைகளை நாம் அதிக முக்கியமாகப் பாராட்ட வேண்டியதில்லை. இந்திய தேசிய இயக்கத்தின் மனோபாவத்தை உணர அவர் தவறிவிட்டதனால் தான் இம்மாதிரி அவர் கூற நேரிட்டது. இந்தியாவின் புதிய இயக்கத்தின் கருத்தைச் சரியாக உணருகின்றவர்கள் இந்தியர்கள் ராஜீய சுயமரியாதை உணர்ச்சியை உணர ஆரம்பிக்கின்றார்கள் என்றே கூறுவார்கள். [கரகோஷம்] இத்தகைய உணர்ச்சி தோன்றுவதற்கு இரண்டு முக்கிய காரணங்களிருக்கின்றன. அவையாவன:— 1. நாங்கள் பெற்ற கல்வி 2. மகாயுத்தத்தின் பயனாகப் பரவிய புதிய எண்ணங்கள் எங்கள் மனதில் பதிந்தது. 60 வருஷங்களுக்கு முன்புதான் இந்தியர்களுக்கு மேனாட்டு முறையில் கல்வி கற்பிப்பதென்று தீர்மானிக்கப் பட்டது. அப்பொழுதே அத்தகைய பரிக்ஷார்த்த முயற்சியின்மையினால் இந்தியர்கள் பிரிட்டிஷாருடன் சமபங்காளித்துவம் கோரும்படியான காலம் வருமென்று லார்டு மெக்காலே ஜோசியம் கூறினார். அத்தகைய காலம் தோன்றும்பொழுது அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சரித்திரத்திலே மிக்க பெருமை பாராட்டக்கூடிய காலமாக இருக்குமென்று அவர் கூறினார். அத்தகைய காலம்தான் இந்தியாவில் தோன்றியிருக்கிறது. [கரகோஷம்] இதனுடன் மகாயுத்தத்தின் பயனாகப் பரவிய சுய நிர்ணயம் ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் நாட்டை ஆள உரிமை பெற்றிருக்கின்றனர் என்ற எண்ணங்களும் இந்தியரது மனதில் அதிகமாகப் பதிந்தன. இந்தச் சுதந்திர எண்ணங்கள் இந்தியரின் ஹிருதயத்தில் பாய்ந்து அவர்கள் ஹிருதயத்தைத் துடிக்கும்படி செய்யமாட்டாதென்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்திய தேசிய இயக்கத்தை ஏகாதிபத்தியத்திடம் கொண்டுள்ள விசுவாசமின்மைக்குரிய அறிகுறியாகப் பொருள் படுத்திக் கூறுவது அவருக்குஊகித்தறியும சக்திசற்றுமில்லை என்பதையோ, அல்லது இந்தியரின் உண்மையான மனோபாவத்தை வேண்டுமென்று திரித்துக்கூறுவதையோ தான்காட்டக்கூடும்.

ஏகாதிபத்தியத்திற்குள்ளே தான் இருக்க வேண்டுமென்ற எண்ணம் இந்தியாவில் இருந்து வருகிறது. ஆனால் அடிமைகளாக ஏகாதிபத்தியத்தில் வாழ்வில்லை என்றும், வாழ்ந்தால் வெள்ளைக்காரர்களுக்குச் சமமானதாயும் கௌரவமானதாயும் உள்ள பங்காளித்துவ முறையில்தான் வாழ்வதென்றும் இந்தியர்களுள் திடமான அபிப்பிராயமிருந்து வருகின்றது. (கரகோஷம்)

பொதுவாக கறுப்பு மனிதர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் அதிலும் முக்கியமாக இந்தியர்கள் தாழ்ந்தவர்களென்றும் பேசுகின்றவர்களுக்கு எங்களுடைய புராதனமான நாகரீகத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. தாழ்ந்தவர்கள் என்று சொல்லுவதைக் கூட எங்கள் ஜனங்கள் எவ்வளவு பலமாக வெறுக்கிறார்கள் என்பதை நீங்கள் உணரவில்லை போலும். பக்தியாய்ந்த கிறிஸ்தவர்களடங்கிய கூட்டத்தில் பேசுவதாக நான் நம்புகின்றேன். ஏசுநாதர் கறுப்பு மனிதரைப்பற்றி என்ன கூறினார் என்பதை உங்களுக்கு நான் எடுத்து ஞாபக மூட்ட [illegible] இப்படியிருக்க ஒரு தனிப்பட்ட நபர் அல்லது ஜாதியார் இன்னொருவரின் [illegible] படி ஏற்றத் தாழ்வு [illegible] கள் கூறக்கூடும். [illegible] கண்டங்களின் [illegible] ங்களில் எங்களுடைய [illegible] யுடைய திரா[illegible] கொடுத்து நின்று எதிரிகளுடன் தீரமாகப் போராடி மடிந்திருக்கிறார்கள். [கரகோஷம்] உங்களுடன் மடிவதற்கும் சமமாக இருக்க இலாயக்குள்ள நாங்கள் உங்களுடன் சமமாக வாழ்வதற்கும் தகுதியுடையவர்களல்லவா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பல பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றது.

கலைகளிலும் நாகரீகங்களிலும் வித்தியாசப்பட்ட பல ஜாதியார்களும் ஒருங்கு சேருவதற்கு அது ஒருசந்தர்ப்பத்தை அளித்ததே என் மனதிற்கு எல்லாக் காரியங்களையும் விடச் சிறந்ததாக நான் நினைக்கின்றேன். [சபாஷ் சபாஷ்] ஏகாதிபத்தியத்திற்குள் இந்தியா இருந்தால் தான் அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படும். சுயஆட்சி பெற்றுத் திருப்தியுடன் இருந்துவரும் இந்தியா தான் ஏகாதிபத்தியத்திற்கு மிக்க பலத்தை அளிக்கக்கூடியதாக இருக்கும். ஏகாதிபத்தியமானது உன்னதமான இலக்ஷியங்களுக்காக ஏற்பட்டிருக்கின்றது. அதற்குச் சிறந்த சம்பிரதாயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச் சிறந்த இலக்ஷியங்களையும் இப்புனிதமான சம்பிரதாயங்களையும் ஏற்றுப் பாதுகாக்கின்றவர்கள் என்ற பெருமை எங்களுக்கும் உண்டாகும்படி செய்யுங்கள். இதுதான் எங்களுடைய பெரிய அவா. இது விஷயத்தில் நீங்கள் அனுதாபங்கொண்டு யோசிக்க வேண்டும். நான் உங்கள் நாட்டைவிட்டு இந்தியாவிற்குச் சென்று அன்பும் சுதந்திரதாகமும் கொண்ட ஆஸ்திரேலியர் இந்தியர்களுடன் இணக்கமாக வாழத்தயாராக இருக்கிறார்கள் என்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அங்கத்தினராக இருப்பதற்குரிய பொறுப்புகளை ஏற்பதுடன் அதற்குள்ள உரிமைகளில் கலந்து கொள்ளவும் சந்தோஷமாக அழைக்கின்றார்கள் என்றும் இந்தியரிடம் கூறி உங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிக்கலாம் [நெடுநேரம் பலத்த கரகோஷமிருந்தது] (கோவை சி.ஜி. ஜே. சுந்தரம்)

## கும்பகோணம் ஜில்லா கமிட்டி தேர்தல்.

29-11-26 கும்பகோணம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டம் மாயவரம் பட்டமங்கல தெரு ஸ்ரீமான் மருதவாணம் பிள்ளை ஜாகையில் மாலை கூடியது.

5-மணிக்கு பழைய கமிட்டி கூட்டம் நடந்தது. முடிவுற்றதும் 5–30 மணிக்கு புது ஜில்லா கமிட்டி அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான்களான சி. எஸ். சுவாமிநாத செட்டியார், ஓ. கே. இராமசுவாமி செட்டியார், எம். கலியாண சுந்திரம் முதலியார், சொ. சட்டயப்பபிள்ளை, டி. எஸ். தியாகராஜ ஐயர், கலியாண சுந்திரம், இராம அமிர்த அம்மாள், எஸ். வி. லிங்கம், முதலிய 8 அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீமான் ஓ. கே. இராமசுவாமி செட்டியார் தலைமை வகித்தார்.

ஸ்ரீமான் சி. மருதவாணம்பிள்ளை M.L.C. அவர்கள் ஜில்லா கமிட்டி தலைவராகவும், ஸ்ரீமான் சி. எஸ். சுவாமிநாத செட்டியார், காரியதரிசியாகவும், பிரேரணை செய்யப்பட்டு, கமிட்டியால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது. இதர விஷயங்களைப்பற்றி முடிவுசெய்ததும் இரவு 7-30க்கு கூட்டம் இனிது முடிவுற்றது என ஸ்ரீமான் எஸ். வி. லிங்கம் அறிவிக்கிறார்.

# ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

## தென்ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்தையும், சுயமரியாதையையும் கருதி பார்ப்பனரல்லாத மக்கள் ஒன்றுகூடி உழைப்பதற்கு என்று ஒரு சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்பதாக சென்ற ஒருவருஷ காலமாகவே "குடி அரசு" பத்திரிகையின் மூலமாகவும், மற்றும் பல சொற்பொழிவுகளின் மூலமாகவும் பொதுஜனங்களை கேட்டுக்கொண்டதும், அதற்கநுகூலமாக தமிழ் நாட்டின் எல்லா பாகங்களிலிருந்தும், கொழும்பு, சிங்கப்பூர், சுமத்ரா, ரங்கூன், தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்களிடமிருந்தும் ஆயிரக்கணக்கான கையெழுத்துக்களும், ஆதரவுகளும் வந்ததோடு சிறு சிறு உதவித் தொகையையும் அனுப்புவதன்மூலம் தங்கள் தங்கள் ஊக்கங்களை காட்டிக்கொண்டதையும் அவ்வப்போது குறிப்பிட்டிருந்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், சட்டசபைத் தேர்தல் விஷயமானது நாட்டையே சிறப்பாக நமது தமிழ் நாட்டையே விழுங்கிக்கொண்டிருந்ததாலும் சட்டசபைத் தேர்தல்கள் முடிந்த பிறகு இம்மாதிரி ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதாயிருந்தால் இன்னும் அதிகமான பலன்களை உண்டாக்க சௌகரியமாயிருக்குமென்தாக பல நண்பர்கள் யோசனை சொன்னதையும் கருதி தேர்தல் வரையிலும் ஷெ சங்க ஸ்தாபன சம்பந்தமான முயற்சியை ஒதுக்கிவைத்திருந்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். அது போலவே தேர்தல் முடிந்ததும் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் முதலிய ஜில்லாக்களிலிருந்து பொறுப்புள்ள பல கனவான்கள் அச்சங்கத்தை ஆரம்பிப்பதற்காகவும், அதற்குவேண்டிய திட்டங்களை வகுத்து பிரசாரம்செய்து அமுலில் நடத்துவதற்காகவும் தீவிர கவலை எடுத்துக்கொண்டு ஸ்ரீமான் நாயக்கரை வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க ஸ்ரீமான் நாயக்கர் ஷெ ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்து அதாவது சென்ற மாதம் 28-உ திருச்சியிலும், 29-உ திருநெல்வேலியிலும் 30-உ தென்காசியிலும், 1-உ தூத்துக்குடியிலும், 2-உ மதுரையிலுமாக சுற்றுப்பிரயாணங்கள் செய்து பெரும்பெருங் கூட்டங்களிடையே நிகழ்த்திய சொற்பெருக்குகளும் நடத்திய காரியங்களும் ஆங்காங்கு சங்கங்கள் ஸ்தாபித்ததையும் சுருக்கமாக குறிப்பிடுகிறோம்.

28-உ காலை ஈரோட்டிலிருந்து திருச்சிக்கு மாலை 6-மணிக்கு போய்ச் சேர்ந்தவுடன் அங்குள்ள முக்கியமான பல கனவான்கள் ரயிலுக்கு வந்திருந்தவர்களுடனும் இன்னும் ஊருக்குள் உள்ள பல முக்கிய கனவான்களையும் ஸ்ரீமான் கலியபெருமாள் நாயுடு அவர்கள் ஜாகையில் கலந்துபேசி பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கம் என்பதாக ஒன்று திருச்சியில் ஏற்பாடு செய்வதற்கு தீர்மானித்து அதற்காக சில பிரதம ஏற்பாடுகளும் செய்துவிட்டு அன்று இரவு 10-மணி வண்டியில் திருநெல்வேலிக்கு பிரயாணமாகி 29-உ காலை 8-மணிக்கு திருநெல்வேலி சேர்ந்து அங்கு தென் இந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் அவ்வூர் பார்ப்பனரல்லாத பிரபலஸ்தர்களுடனும் மற்றும் நாயக்கர் வருகையை உத்தேசித்து அஜ்ஜில்லா சுற்றுப்பக்கங்களிலிருந்து வந்திருந்த பல கனவான்களுடனும் பார்ப்பனரல்லாதாரின் தற்கால நிலைமையைக் குறித்துப் பேசி, ஏற்கனவே அவ்வூர் பிரமுகர்களால் "பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக் கழகம்" என்பதாக ஒன்று நிறுவப்பட்டு தற்கால அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் இராமநாததேசிகர் அவர்களால்போடப்பட்ட துண்டுப்பிரசுரங்களையும் கழகக் கொள்கைகளையும் கவனித்து சிற்சில திருத்தங்களுடனும் மற்றும் தமிழ்நாடு முழுவதற்குமாக ஒத்த திட்டங்களை அமைக்க இக்கழகத்தின் பேராலேயே ஒரு பொது மகாநாடு கூடிய சீக்கிரத்தில் கூட்டி அதில் முடிவு செய்து கொள்வதென்றும் தீர்மானித்து மாலை 6 மணிக்கு திருநெல்வேலி டவுன் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் மந்திரமூர்த்தி பள்ளிக்கூடத்திற்கு முன்னிலையில் ஸ்ரீமான் பென்ஷன் தாசில்தார் நெல்லையப்ப பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் கூடிய பெருங்கூட்டத்தில் கழக அவசியத்தையும் கொள்கைகளையும் அதற்கு வேண்டிய உத்தேச திட்டங்களையும் தெளிவாய் எடுத்துச் சொல்லி அந்த இடத்திலேயே பல அங்கத்தினர்கள் சம்மதத்தையும் பெறப்பட்டது. இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான்கள் களவாய் ராமசாமி முதலியார் அவர்கள், தீர்த்தாரப்ப முதலியார் அவர்கள், சாவடி சு. கூத்த நயினார் பிள்ளை அவர்கள், நெல்லையப்பா கோவில் டிரஸ்டி டி. எம். கோமதி நாயகம் பிள்ளை அவர்கள், விளாகம் சிதம்பரம் பிள்ளை அவர்கள், கோவாப்ரேட்டிவ் பாங்கி டி. எஸ். காந்திமதிநாதபிள்ளை அவர்கள், வக்கீல் நீலகண்ட பிள்ளை அவர்கள், ஏ.டி. வீரபத்திரபிள்ளை அவர்கள், கலைத்தி முடுக்குதெரு மேகலிங்கம் பிள்ளை அவர்கள், திருவரங்கம் பிள்ளை அவர்கள் மற்றும் பலசரக்குக்கடை ஜவுளிக்கடைவியாபாரிகளும், சிலவக்கீல்களும் மகம்மதிய கனவான்களில் பலரும், வெளியூர்க்காரர்கள் பலரும், பார்ப்பன கனவான்களில் பலரும் ஆக சுமார் 2000 பேர்கள் வரை விஜயமாயிருந்தார்கள். தவிர பகலெல்லாம் நாயக்கரின் மாலைப்பிரசங்கம் நடவாதென்றும், கலெக்டரிடம் 144 வாங்கி ஆய்விட்டதென்றும், இன்னும் பலவித கற்பனைக் கட்டுகளும் கட்டிவிட்டு கூட்டத்திற்கு ஜனங்கள் வராதிருக்க அவ்வூர் பார்ப்பன ஸ்ரீமான்களால் பலமான விஷமப் பிரசாரம் செய்யப்பட்டது. அதோடு சிறு சிறு பொடிப் பையன்களை விட்டு கூட்டம் இல்லை என்றும், கூட்டத்திற்கு யாரும் போகக்கூடாது என்பதாக பிரசங்கம் செய்வது போலவும் தெருத் தெருவாய் பேசச் செய்யப்பட்டது. இம்மாதிரி செய்கைகளை கூட்டத்திற்கு பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும், அதிகமான கனவான்களையும் வரச்செய்துவிட்டது. கூட்டம் சுமார் $10\frac{1}{2}$-மணிக்கு தலைவர் ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளை அவர்கள் முடிவுரையுடன் அதாவது நாயக்கரின் உபந்யாசத்தின் சிறப்பைப்பற்றியும் சுயமரியாதைச் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும், அன்பைப்பற்றியும், அன்பிற்கு நமது நாட்டில் இருக்கும் தடையைப்பற்றியும் சுருக்கமாகவும் பல மேற்கோள்களுடனும் அழகாகப் பேசி, பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் எல்லோரும் இச்சங்கத்தை ஆதரிக்கவேண்டுமென்று பேசி முடித்தார்.

மறுநாள் 30-உ காலை 10-மணிக்கு திருநெல்வேலியிலிருந்து மோட்டார் வழியாய் தென்காசிக்குப் பிரயாணமாகி அன்று மாலையில் தென்காசி கோவிலுக்கு எதிரில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வூர் கோவிலில் தேவாரம் வாசிக்கும் விஷயமாய் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் என்கிற உணர்ச்சி சமீபத்தில் ஏற்பட்டிருந்த தென்காசியில் சமீபத்தில் இதுவரை இம்மாதிரி கூட்டமே கூடினதில்லை என்று சொல்லும்படியான அவ்வளவு அதிகமான கனவான்கள் உள்ளூர்க்காரர்களும், வெளியூர்க்காரர்களும் மகமதிய கனவான்களுமாக விஜயம் செய்திருந்தார்கள். அதாவது ஸ்ரீமான்கள் வக்கீல் பழனியப்ப முதலியார் அவர்கள், அவர் மருகர் பழனியப்ப முதலியார் அவர்கள், வக்கீல் சோமசுந்தர முதலியார் அவர்கள், தமிழ்ப் பண்டிதர் தேசிகர் அவர்கள் தென்காசி கோவில் தர்மகர்த்தா அவர்கள், அச்சுக்கூடத் தலைவர் மீனாட்சி சுந்திரம் பிள்ளை அவர்கள் மற்றும் திருநெல்வேலியிலிருந்தும் பல வெளி இடங்களிலிருந்தும் மகம்மதிய கனவான்களும் நிறைய வந்திருந்தார்கள். நாயக்கர் உபந்யாசமுடிவில் திருக்குறள் சுவாமியாரவர்களால் முடிவுரையில் சங்கத்தை அவ்வூரார் மனப்பூர்வமாய் ஏற்பதாகவும் அதற்கு தற்கால காரியதரிசியாக ஸ்ரீமான் மீனாட்சி சுந்திரம் பிள்ளை அவர்கள்பிரேரேபிக்கப்பட்டுவக்கீல்ஸ்ரீமான் பழனியப்ப முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது. 11 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டம் முடிந்தவுடன் நாயக்கர் ஜாகையில் சில முக்கியஸ்தர்கள் கூடி மேல் நடக்கவேண்டிய விஷயங்களைப்பற்றியும், சுற்றுப்புறங்களிலும் இச்சங்கம் நிறுவப்படவேண்டிய விஷயத்தைப்பற்றியும் பேசி முடிந்தபின் ஸ்ரீமான் பழனியப்ப முதலியார் அவர்கள் வீட்டில் சிறு விருந்து நடந்ததும் 12 மணிக்கு நேரே மோட்டார் மூலமாய் திருநெல்வேலிக்கு புறப்பட்டு விட்டார்கள். அன்றிரவு திருநெல்வேலியில் இருந்துவிட்டு

(இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

அக்ஷய-ஹூ கார்த்திகை-மீ 20-உ.

## இனி என்ன செய்யவேண்டும்?

சென்னை மாகாண நிர்வாகத்திற்கு புதிய மந்திரிகள் நியமனமாய்விட்டது. அதாவது, ஸ்ரீமான்கள் டாக்டர் P. சுப்பராயன், A. ரங்கநாத முதலியார், R. N. ஆரோக்கியசாமி முதலியார் ஆகிய மூன்று கனவான்கள் நியமனம் பெற்றுவிட்டார்கள். இவர்களுள் முறையே ஒருவர் ஜமீன்தார். ஒருவர் பிரம்மஞான சங்கத்தார். ஒருவர் சர்க்கார் பென்ஷன் உத்தியோகஸ்தர்.

ஆனபோதிலும் இவர்கள் தங்களுக்கு என்று யாதொரு தனி கொள்கையும், இயக்கமும் இல்லாதவர்களாகையால் தனித்தனியாக சமயம்போல் அவர்களுக்கு தோன்றியபடி நிர்வாகத்தை நடத்திக்கொண்டுபோவார்கள் என்றேதான் நாம் நினைக்கவேண்டும். அதோடு மந்திரிகள் மூவரும் பார்ப்பனரல்லாதார்கள்தான் என்று சொல்வதாயிருந்தாலும் தங்கள் தங்கள் காலிலேயே நிற்கத்தகுந்த பொதுஜன ஆதரவோ கட்சி பலமோ கொள்கைபலமோ இல்லாதவர்கள். ஆதலால் நமது முன்னேற்றத்தின் எதிரிகளான பார்ப்பனர்களின் தயவில்லாமல் அரை நிமிஷமும் உயிர்வாழ முடியாதவர்கள். ஆனதால் இம்மந்திரி நியமனம் பார்ப்பனர்களுக்கு அனுகூலமே தவிர பார்ப்பனரல்லாதார்களுக்கு ஒன்றும் அனுகூலம் இல்லையென்றே சொல்லவேண்டும். தேசத்திற்கு மந்திரிகளால் நன்மையோ தீமையோ ஏற்படக்கூடும் என்று ஒருபொழுதும் நாம் எண்ணியதும் கூறியதும் இல்லை; ஆதலால் தேச முன்னேற்றத்திற்குஇவர்களிடமிருந்துநாம்ஒன்றும்எதிர் பார்க்கவில்லை. நிற்க! இனி ஜஸ்டிஸ் கட்சி என்ன செய்யப்போகிறது. அடுத்த தேர்தல் வரையில் அதாவது இன்னும் மூன்று வருஷ காலத்திற்கு மந்திரி பதவி காலமாய் விட்டதற்குதுக்கம்கொண்டாடப்போகிறதா அல்லதுஉருப்படியானஏதாவதுஒரு பிரசாரத்தைசெய்து பார்ப்பன ஆதிக்கத்தை அழித்து பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றப்போகிறதா என்பதுதான் நமது கவலை. உண்மையில் மந்திரிபதவி போய்விட்டதால் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு ஒன்றும் தடை ஏற்பட்டுவிடவில்லை. தற்கால மந்திரி பதவியால் பார்ப்பனரல்லாதாருக்கு அதிகமான கெடுதி ஏற்பட்டுவிடுவதாய் வைத்துக்கொண்டாலும் அது என்னவாயிருக்கக்கூடும். பார்ப்பனரல்லாதாருக்கு சர்க்கார் உத்தியோகமில்லாமல் செய்யக்கூடும். சர்க்கார் உத்தியோகங்களில் இருக்கும் பார்ப்பனரல்லாதார் பலருக்கு உத்தியோகம் போகக்கூடும். இதற்குமேல் ஒரு கடுகளவு கெடுதிகூட ஏற்பட கொஞ்சமும் இடமில்லை. இதைத்தவிர வேறு ஒரு கெடுதியும் பார்ப்பனரல்லாதாருக்குசெய்துவிடவும் முடியாது செய்யவும் அதில் இடமில்லை. இம்மாதிரி மாறுதல் ஏற்பட்ட சமயத்தில் நமது நாட்டு மக்கள் இனிமேல் என்ன செய்யவேண்டும் என்கிற யோசனையின்பேரில் தலைவர்கள் என்சொல்வார்களோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" ஆகிய கட்சிப் பத்திரிகைகள் யாதொரு தகவலும் தெரிவிக்காமல் வாய்மூடிக் கொண்டிருப்பதின் இரகசியம் விளங்கவில்லை. இதை கவனிக்கும்போது அக்கட்சித் தலைவர்களுக்கு இன்னும் மந்திரி பைத்தியம் இருப்பதாகவே எண்ணவேண்டியிருக்கிறது. ஆதலால் இனியும் இதுபோலவே வாய் மூடிக்கொண்டிருக்காமல்உடனே கோயமுத்தூர், திருச்சி, மதுரை ஆகிய மூன்று இடங்களில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்டி இனியும்தீவிரமான திட்டம் வகுத்து பார்ப்பனர் அடக்கு முறையையும் சூழ்ச்சிகளையும் எதிர்த்து நின்று உடனே வேலை செய்யத்தொடங்கவேண்டும். இல்லையேல் நமது எதிரிகள் "பார்ப்பனரல்லாதார் கட்சி உத்தியோகக் கட்சி என்பதும் பார்ப்பனரல்லாதார் கட்சி ஒழிந்தது" என்பதும் நிஜம் என்று எண்ண இடமுண்டாகிவிடும்.

---

## "பொய் பொய் முற்றும் பொய்" ஆனால் மெய் மெய் முற்றும் மெய் எங்கே?

ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தேர்தல்கள் விஷயத்தில் பார்ப்பனரல்லாதார்களுக்கு விரோதமாகவும் பார்ப்பனர்களுக்கு அநுகூலமாகவும் தேசபக்தியைச் சாக்காட்டிகொண்டு பிரசாரம் செய்துவந்ததை பலதடவைகளில் நாம் பலமாய்க்கண்டித்திருப்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். கடைசியாக ஸ்ரீமான் A. ராமசாமி முதலியாருக்கு விரோதமாக செங்கல்பட்டு ஜில்லாவில் பாமர மக்களிடையில்போய் சீமையிலுள்ள மனிதர்களுக்கு சராசரி வயது 50 என்றும், நமது நாட்டிலுள்ள மக்களுக்கு சராசரி வயது 25 என்றும், அதற்கு காரணம் ஜஸ்டிஸ் கட்சியும் A. ராமசாமி முதலியார்தான் என்றும், ஆதலால் அவருக்கு ஓட்டுச்செய்யவேண்டாம் என்றும் இன்னமும் இதுபோல் பல விஷயங்கள் பேசியதாக பத்திரிகைகளில் பார்த்து கண்டித்தெழுதி இருந்தோம். அதுசமயம், தான் அப்படிப்பேசவில்லை என்றும்,பார்ப்பனர்கள் தங்கள பத்திரிகையில் அப்படி எழுதிக்கொண்டார்கள் என்றும்அவர்சொன்னார். அதற்குப்பிறகுகூட ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு விரோதமாய்த்தொழிலாளர் சங்கங்களுக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை அழைத்துப்போய் அய்யங்கார் அவர்கள் இந்திய சட்டசபையிலும் காங்கிரசிலும் தொழிலாளர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்றும், உதவி செய்வார் என்றும் சிபார்சு செய்தார்; அது சமயம் நாம் கண்டித்தெழுதியிருந்தபோதும் ஸ்ரீமான் முதலியார் அவர்கள், நான் அறிமுகம் செய்துவைத்தேனே ஒழிய சிபார்சு செய்யவில்லை என்று எழுதியதோடு "குடி அரசு" இழிமொழிகளை எழுதி இருக்கிறதென்று எழுதியிருந்தார். அதன்பிறகு கொஞ்சநாள் பொறுத்து ஸ்ரீமான் சக்கரை செட்டியாருக்கு விரோதமாகவே,தேர்தலில், ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரையே ஆதரிக்கவேண்டுமென்று ஸ்ரீமுகமும் அனுப்பினார். இதை"சுதேசமித்திரன்" முதலிய பத்திரிகைகள் பிரசுரித்திருந்ததோடு பார்ப்பனர்கள் அதைத்துண்டுப் பிரசுரங்களாகவும் வழங்கினார்கள். இதைப் பற்றியும் நாம் எழுதினால் இதற்கும் ஏதாவது சமாதானம்சொல்லுவாரென்றே கருதி சும்மாயிருந்தோம். கடைசியாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் தேர்தலில் வெற்றிபெற்ற தமது " வீரப்பிரதாபத்தை, முழக்கி வெற்றிச் சங்கூதுகையில்' ஸ்ரீமான்களான வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார், ராமசாமி நாயக்கர் முதலிய எத்தனையோ பார்ப்பனரல்லாதார் எதிர்த்தும் வெற்றி பெற்றுவிட்டேன் என்று எழுதி இருந்தார். இதைப் பார்த்ததும் வந்துவிட்டது கோபம் நமது முதலியாருக்கு! எழுந்தார் பேனாக்கோலை எடுத்தார்!"பொய் பொய்,முற்றும் பொய்" என சத்தியமூர்த்தியைப் பிளந்தார். ஏன்! பார்ப்பனத் தலைவர் நமது சத்தியமூர்த்திகளையாவர். வசிஷ்டர் வாயால் பிரமரிஷிப் பட்டம் பெற்றால்தான் மற்ற ரிஷிகள் மதிப்பார்கள். அப்படிப்போல ஸ்ரீமான் சத்தியமூர்த்திவாயில் திரு. முதலியார் அவர்களைப் புகழாவிட்டாலும் இகழாமலாவதிருந்தால் தான் பார்ப்பனர்கள் முதலியாரை திரும்பியாவது பார்ப்பார்கள்; ஆதலால் சத்தியமூர்த்தியைப் பிளக்க வேண்டிய அவசியம் வந்து என்ன எழுதினார் என்றால் "தான் தேர்தல் பிரசாரத்தில் கலவாதிருந்தாலும் கூட தேர்தலுக்கு2 நாள் முன்னதாகக் கூட ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை ஆதரித்துக் கூறிய உரைகள் பல பத்திரிகைகளில் வெளியாயிற்று. அவ்வுரைகள் துண்டுப் பிரசுரங்களாகவும் விளங்கிற்று........ ஆதலால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் கூற்று "பொய் பொய் முற்றிலும் பொய்" என்று சாக்ஷி ஆதாரங்களுடன் பிளந்திருக்கிறார். அப்படியானால் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தேர்தலில் கலவாதிருக்கப் போவதாகச் சொன்னதும்சுயராஜ்யக் கட்சியாலும் கட்சித் தலைவர்களாலும் வகுப்புப்பூசலும் வகுப்பு வாதமும்நமதுநாட்டில் ஏற்பட்டதுஎன்றதும்அர

## சங்கர நாராயணர் கோவிலுக்குள் கக்கூசும் மிதியடியும்.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சங்கரன் கோவிலென்னும் சங்கர நாராயணன் கோவிலானது அச்சில்லாவில் உள்ள முக்கிய கோவில்களுக்குள் ஒன்று. அக்கோவிலுக்கு ஏராளமான சொத்துக்களு வரும்படி உண்டு. லோக குரு என்றும் சங்கராச்சாரியார் சுவாமிகள் என்றும் சொல்லப்பட்ட ஸ்மார்த்தர்களின் குருவானவர் இம்மாதம் அவ்வூருக்கு வந்து அக்கோவிலை தனக்கும் தனது பரிவாரத்திற்கும் ஜாகையாக வைத்துக் கொண்டார். அதோடல்லாமல் "சுவாமிகளின்" திருக் கக்கூசும் அக்கோவிலுக்குள்ளாகவே கட்டப்பட்டு "சுவாமிகளின்" திருமலமும் கோவிலிலேயே சமர்ப்பிக்கப் பட்டுவிட்டது. அக்கோவில் டிரஸ்டி கனவான்களில் பார்ப்பனரல்லாதார் அதிகமாய் (மெஜாரிட்டியாய்) இருந்தும் இதை ஆக்ஷேபிக்க தைரியமில்லை. ஏனென்றால் அவ்வூர் அதிகாரிகள் எல்லாம் குட்டி சுவாமிகள் குழாங்களாகவே இருக்கின்றன. அதோடு மாத்திரமல்லாமல் "சுவாமிகள்" சங்கர நாராயண சுவாமியை திருக்கண் பார்ப்பதாயிருந்தாலும், திருமிதியடியை தாங்கிய திருபாதத்துடனேதான் மூலஸ்தானத்திற்குப் போய்த் திருக்கண் பார்த்தருளினாராம். அதோடு மாத்திரமல்லாமல் "சுவாமிகள்" கோவிலுக்குள் நுழையும்போது திருமேனியில் திருப்பள்ளிக்கொண்ட கோலத்துடனேயே சென்றாராம். மாமிக்கோர் மாமியுண்டானால் சுவாமிக்கோர் சுவாமி வேண்டாமா? அதுதான் நமது "லோக குரு" "சங்கராசாரியார்," "சுவாமிகள்" போலும். "சுவாமிகளின்" இந்த வைபவங்களையும் தெய்வத் தன்மையையும் கண்ட திருநெல்வேலி நெல்லையப்பர் சுவாமி கோவில் பக்தர்களும், தர்ம கர்த்தர்களும் குறைந்தபக்ஷம் நெல்லையப்பர் கோவிலுக்குள் "சுவாமிகளின்" திருக் கக்கூசாவது கட்டப் படாமல் இருக்கவேண்டுமென்று கருதி லக்ஷக் கணக்கான நூண்டு விளம்பரங்கள் போட்டும் தர்ம கர்த்தாக்களுக்கு நோட்டீசு விட்டும் சத்தியாக்கிரகம் செய்வதாய் பயமுறுத்தியும் ஆர்ப்பாட்டம் செய்து "சுவாமிகளின்" திருக் கக்கூசை திருக்கோவிலுக்குள் கட்டாமலிருக்கத் தக்க ஏற்பாடு செய்துவிட்டார்கள். இது தவிர, நெல்லையப்பர் சுவாமி கோவிலுக்கு முன்னால் "சங்கராசாரிய சுவாமிகள்" வருகையை முன்னிட்டு போடப்பட்ட அலங்காரப் பந்தல்கள் போட அனுமதித்ததின் பலனாய் அஷ்டமி உற்சவத்தின் போது நெல்லையப்பர் சுவாமி எழுந்தருளுகையில் பந்தல் சமீபம் வந்தவுடன் தாழ்ந்தும் குனிந்தும் வெளியே வரவும் உள்ளேபோகவும் ஏற்பட்டது. இதைப் பற்றி பல பக்தர்களுக்கு மனவருத்தமிருந்தாலும் "சங்கராசாரிய சுவாமி"களும் அவரது திருக்கூட்டத்தாரும் இல்லாவிட்டால் நெல்லையப்பருக்கு இவ்வளவு மகத்துவமும் இவ்வளவு வேலி நிலமும் இவ்வளவு சொத்துக்களும் சுகங்களும் ஏது? ஆதலால் "சங்கராசாரிய சுவாமிகளின்" "பந்தலுக்கு நெல்லையப்பர் தாழ்ந்து குனிந்து வணங்க வேண்டியது தான்."

இயல் சங்கங்களை வளரவிடுவது நாட்டிற்குக்கேடென்றதும் நம்மவர்களுக்கு விரோதமாகவோ பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவோ வேலை செய்யவில்லை என்றதும் மெய் மெய் முற்றும் மெய் என்று சொல்வதற்குச் சாட்சி ஆதாரமெங்கே என்று கேட்கிறோம்.

## கோவை ஜில்லா சட்ட சபைத் தேர்தல் முடிவு.

கோயமுத்தூர் ஜில்லா சட்ட சபைத் தேர்தல் முடிவு இச்சில்லா வாசிகளில் பெரும்பான்மையான பேர்கள் மாத்திரமில்லாமல் வெளி ஜில்லா மக்களும் மிகுந்த ஏமாற்றத்தையும் வருத்தத்தையுமே அடைந்தார்கள் என்பதாகவே அறிகிறோம். என்னவெனில் ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்கார் அவர்கள் 100 ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதும் ஸ்ரீமான் ராமலிங்கஞ் செட்டியார் அவர்கள் 100 ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியடைந்ததும் கேட்போருக்கு காணகடூரமாயிருந்திருக்குமென்பதில் அதிசயமில்லை. ஆனால் அத்தேர்தலுக்காக ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் செய்த பணச்செலவும் முயற்சியும் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்கள் செலவு செய்ததில் 10-ல் ஒரு பாகங்கூட இருக்காது. அதாவது ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவாகி இருந்தால் ஸ்ரீமான் செட்டியாருக்கு ரூபாய் ஐயாயிரத்துக்குள்ளாகத்தான் இருக்குமென்பார்கள்.

ஆனபோதிலும் பொது மக்களுக்கு செட்டியாரவர்கள் இடத்தில் ஒரு விதமதிப்பு உண்டு. அதாவது சட்ட சபை விஷயத்திலும் வாய் சிலவு சிக்கன விஷயத்திலும் அநுபோகமுள்ளவர் என்றும் அவர் மந்திரியாக வரவேண்டும் என்றும் நினைத்து விரும்புவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் முன்னால் ஸ்ரீமான் செட்டியார் தோல்வியடைந்தால் அது வருத்தப்படுத்தத்தான் செய்யும். ஆனால் இத்தோல்விக்கு அய்யங்கார் ஒரு சிறிதும் காரணரல்லர். பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக ஏற்பட்ட கட்சியான ஜஸ்டிஸ் கட்சிபிரமுகர்களாலேயே செட்டியார் தோல்விக்கு இடமேற்பட்டுவிட்டது. கோயமுத்தூர் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் தேர்தல் சம்பந்தமாக ஒரு கூட்டத்தார் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் மீது அதிருப்தி கொள்ள இடமேற்பட்டு விட்டது. அதோடு ஸ்ரீமான் ஐயங்கார் அதன் பயனை அடைய தந்திரங்கள் செய்து அவ்வதிருப்தியைத் தனக்கு அனுகூலமாகத் திருப்பிக்கொண்டார். அந்தக் காரணமே ஸ்ரீமான்கள் செட்டியார் தோல்வியடையவும் ஐயங்கார் வெற்றி பெறவும் பெரிதும் அனுகூலமாயிருந்துவிட்டது. டிஸ்டிரிக் போர்டு எலெக்ஷன் மனஸ்தாபம் குறைந்தது 3000 ஓட்டுகளுக்கு குறையாமல் செட்டியாருக்கு விரோதமாய் பதிவு செய்யவும், குறைந்தது 1500 ஓட்டுகளுக்கு குறையாமல் ஐயங்காருக்கு அனுகூலமாய் பதிவு செய்யவும் இடமேற்பட்டுவிட்டது. டிஸ்டிரிக் போர்டு மனஸ்தாபம் இல்லாமலிருந்தால் செட்டியாருக்கு 17,000 ஓட்டுகள் கிடைத்திருக்கும். ஸ்ரீமான் அய்யங்காருக்கும் 10000 ஓட்டுகளுக்கு உள்ளாகவேதான் கிடைத்திருக்கும். இந்தக்காரணத்தாலும் திருச்சிநகரத்தொகுதி தேர்தல்மாதிரியிலும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று பெயர் சொல்லிக் கொண்டு இருந்தசில கனவான்களிடத்தில் அவர்களது 'கட்சி பக்திகள்" நன்றாய் விளங்க இடமேற்பட்டுவிட்டது. சுயநலங்கள் தோன்றும்போது கட்சி வாதங்கள் பறந்து போய் விடுகிறது என்பதற்கு இவைகள் ஓர் உதாரணம். மற்ற ஸ்ரீமான்கள் இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் பட்டக்காரர் வேணு உடையாக் கவுண்டர் அவர்களும் வெற்றி பெற்றதில் நமக்கு ஆச்சரியமொன்றுமில்லை. பதிவான ஓட்டுகளில் 100-க்கு 75 ஓட்டுகள் குடிபானவர்களுடையது. அவர்கள் ஸ்ரீமான்கள் முதலியார் அவர்களையும் பட்டக்காரர் அவர்களையும் மனப்பூர்த்தியாய் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்களே. ஆனால் ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்கும் பட்டக்காரர் அவர்களுக்கும் வெற்றி ஏற்பட்ட சந்தோஷத்தின் தன்மைக்கு மேலாகவே ஸ்ரீமான் செட்டியார் அவர்களுக்கு தோல்வியானதைக் குறித்து ஏற்பட்ட வருத்தம் அதிகமெனறே சொல்லுவோம். தோற்றவர்கள் பேரில் குற்றம் சொல்வது அதர்மமானதாலும் உண்மையாகவே நாம்ஒன்றும் சொல்வதற்குமில்லை ஆனாலும் பொது ஜனங்களை வசியப்படுத்தத்தக்கப்படிப்பும் நமது செட்டியார் அவர்களுக்கு இனியும் கொஞ்சம் அதிகமாக வேண்டுமென்று மாத்திரம் சொல்லுவோம். மற்றபடி மற்றவர்கள் வெற்றி பெறுவதற்கும் செட்டியார் அவர்கள் தோல்வி உறுவதற்கும் மதிக்கத்தகுந்த வேறு வித்தியாசமான காரணங்கள் ஒன்றும் கொஞ்சமும் இல்லை என்பதே நமது அபிப்பிராயம். எந்த விதத்திலும் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் தோல்வியைப் பற்றி பொது ஜனங்கள் வருத்தப்படுகிறார்கள் என்பதையும் செட்டியாருக்கு விரோதமாக வேலை செய்தவர்களில் பெரும்பாலோரும் கூட தாங்கள் நடந்துகொண்டதை குற்றமாகஎண்ணி தங்களுக்குள்ளாகவே வருத்தப்படுகிறார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிகிறோம். இதனால் செட்டியாருக்கு பெருத்த ஏமாற்றம் என்பதையும் தெரிவிக்கிறோம். அதாவது 100 ஓட்டில் அதுவும் தனக்கும் ஸ்ரீமான் அய்யங்காருக்கும் வித்தியாசமாக ஏற்பட்டு தோல்வியடைய நேர்ந்ததும் வெற்றி பெற்றிருந்தால் செட்டியார் அவர்களை முதல் மந்திரியாகவும் மற்ற 2 மந்திரிகளைக்கூட நியமிக்கும் அதிகாரமுடையவராயிருக்கக் கூடிய உறுதியான சந்தாப்பத்தில் தோல்வி ஏற்பட நேர்ந்ததும் அவருடைய எதிரிக்கும் பரிதாபமாக இருக்குமானால் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் ஏமாற்றமடைந்ததாக நினைப்பதும் வருத்தப்படுவதும் அதிசயமாகுமா? ஆதலால் இதிலிருந்தாவது தோல்வி அடைந்தவர்களும் தோல்வி அடையச் செய்தவர்களும் ஒரு படிப்பினை பெறுவர்கள் என்றே நயபுகிறோம்.

(7 ம் பக்கத் தொடர்ச்சி.)

காலை 7-மணி ரயில் வண்டியில் தூத்துக்குடிக்கு பிரயாணமாகி 11-மணிக்கு தூத்துக்குடி சேர்ந்து மற்ற இடங்கள் போலவே உள்ளூர் பல முக்கிய கனவான்களோடு பேசி அவர்களால் ஏற்கனவே தீர்மானித்தபடி ஸ்ரீமான் வக்கீல் குமாரசாமி பிள்ளை அவர்களைத் தலைவராகவும், உபாத்தியாயர் ஸ்ரீமான் முத்துகருப்பபிள்ளை அவர்களை காரியதரிசியாகவும் ஏற்பாடு செய்துகொண்டு அன்று மாலை 7 மணிக்கு வட்டக்கிணற்று மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்தபடி ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் வக்கீல் குமாரசாமி பிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூட்டம் ஆரம்பமாகி, நாயக்கர் சங்கத்தின் அவசியத்திற்காக தற்கால நிலைமையைப்பற்றிச் சொல்லும்போது ஒரு பார்ப்பனர் எழுந்து, "இவைகளுக்குத் தாங்கள் ஜவாப்புதாரி அல்லவென்றும் பெரியவர்களும், சாஸ்திரங்களும் ஆதார"மென்றும் சொல்லி, பிராமணர், சூத்திரர் என்கிற போர்டு பலகைகள் தாங்கள் போடவில்லையென்றும் தங்கள் பெரியவர்களாலேயே போடப்பட்டதென்றும் பொருள்பட பேசினார். ஸ்ரீமான் நாயக்கர் உடனே அதை ஒப்புக்கொண்டு அதை ஒழிக்கத்தான் நாங்கள் பிரயத்தனப் படுகிறோம். அது யாரால் ஏற்பட்டிருந்தாலும் எங்களுக்கு கவலையில்லை. அது இன்னார் செய்தார்கள் என்றுகூட கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது எங்களுக்கு இன்னும் அதிகமான அவமானமாக இருக்கிறது. அது ஒழிய வேண்டுமா? வேண்டாமா? என்று கேட்டார். கேள்வி கேட்ட பார்ப்பனர் ஒன்றும் மறுமொழி சொல்ல முடியாமல் போகவே ஜனங்கள் கிரித்ததைப் பார்த்து அவருக்கு கொஞ்சம் வெட்கமேற்பட்டுவிட்டது. மறுபடியும் அரைமணி நேரம் பொறுத்து மற்றொருவர் எழுந்து பார்ப்பனர்களை மாத்திரம் குற்றம் சொல்லுகிறீர்களே வேளாளர் மாத்திரம் யோக்கியர்களா? என்று கேட்டார். கூட்டத்திலிருந்த ஜனங்கள் கேள்வி கேட்டவரைப்பார்த்து "நாயக்கர் இரண்டு கூட்டத்தாரையும் மற்றும் அம்மாதிரி செய்யும் கூட்டத்தாரையும் சேர்த்தேதான் கண்டிக்கிறார். அப்படியிருக்க வேளாளர்களைப்பற்றித் தனியாகக் கேட்பானேன்" என்று சொல்லி கேள்வி கேட்டவர் மீதில் கோபித்தார்கள். நாயக்கர் கூட்டத்திலிருந்தவர்களுக்கு சமாதானம் சொல்லி யார் என்ன கேள்வி கேட்பதாயிருந்தாலும் தாராளமாய் கேட்கலாமென்றும், தான் பேசுவதைப்பற்றிய எவ்வித கேள்விக்கும் பதில் சொல்லத் தயாராயிருப்பதாயும், கேள்வி கேட்பவர்களையும் பொதுஜனங்கள் அனுமதிக்கவேண்டும் என்றும் அப்படிக்கு அமைதியோடு அனுமதிக்காதபட்சம் நமது எதிரிகள் சூழ்ச்சிக்கு இடமுண்டாய்விடுமென்றும் சொல்லி கேள்வி கேட்டவர்களை பக்கத்தில் வரும்படி சொல்லி ஒவ்வொரு கேள்விக்கும் [illegible] விடை அளித்து, சமாதானமாயிற்றா? திருப்தியாயிற்றா? என்று கேட்டுக்கொண்டே மேலே பேசினார். கேள்விகளின் தத்துவங்களாவன. தேவஸ்தான சட்டத்தையும், மலையாள குடிவார மசோதாவையும், ஆதரிப்பதைப்பற்றியும், சுயராஜ்ய கட்சியை கண்டிப்பதைப்பற்றியும், ஸ்ரீமான் திருகூட சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு விரோதமாயும் ஸ்ரீமான் சாவடி பிள்ளை அவர்களுக்கு அநுகூலமாயும் நான் பிரசாரம் செய்ததால் ஸ்ரீமான் திருகூட சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு தோல்வி ஏற்பட்டுவிட்டதால் அது காங்கிரசுக்கு விரோதமல்லவா? என்பதைப்பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. கேள்விகளை எல்லாம் நன்றாய் படித்துக்காட்டி ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொல்வதின்மூலம் மலையாளத்தில் பார்ப்பனர் செய்யும் அக்கிரமத்தையும் தேவஸ்தான விஷயத்தில் மதசம்பந்தமாக மடாதிபதிகள், மகந்துக்கள், பூஜாரிகள் முதலியவர்கள் செய்யும் அக்கிரமத்தைப்பற்றியும் தெளிவாய்ச்சொல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதால் இதுகளுக்குமாத்திரம் சுமார் ஒன்றரை மணிநேரம் விபரமாய் எடுத்துச்சொன்னதில் கூட்டத்தார் பார்ப்பனர்களின் அக்கிரமங்களை சகியாதவர்களாய் ஸ்தம்பித்துப் போனார்கள் பிறகு சுயராஜ்யக் கட்சியை கண்டிப்பதின் காரணத்தை சொல்லிவருகையில் கூட்டத்தார் வெட்கம், வெட்கம் என்று சொல்லி நகைத்தவண்ணமாயிருந்தார்கள்.

பிறகு ஸ்ரீமான் சாவடி பிள்ளை அவர்கள் தேர்தலில், தான் சாவடி பிள்ளை அவர்களுக்கு வேலை செய்யவோ பெயரைச் சொல்லி இன்னாருக்குப்போடுங்கள் இன்னாருக்குப்போடாதீர்கள் என்று சொல்லவோ இல்லை என்றும், சென்றமாதம் திருநெல்வேலி பிரசங்கத்தில் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி கொள்கைகளையும் பார்ப்பனீயத்தின் அக்கிரமங்களையும் கண்டித்ததுண்டு என்றும் ஸ்ரீமான் சாவடி பிள்ளை அவர்களை தனக்கு நேரில் தெரியாது என்று அன்றைய கூட்டத்திலேயே சொன்னதாகவும், சொன்னதோடு அன்றைய கூட்டத்தில் பார்ப்பனீயத்தை கண்டித்துப் பேசியதால் தனக்கு ஓட்டுப் போடுவதாயிருந்த சில பார்ப்பனர்கள் தனக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் என்றுகூட பிள்ளை அவர்களும் அவர்கள் குமாரரும் பயப்பட்டதாக தனக்குத் தெரியவந்தது என்றும் சொன்னதோடு தேவஸ்தான சட்ட விஷயமாய் இந்த கேள்வி கேட்பது மாத்திரம் அல்லாமல் இன்னமும் நான் ஊருக்குப் போனபிறகு கூட ஏதாவது கேள்விகள் ஞாபகத்துக்கு வந்தாலும் கேளுங்கள் நான் எனக்குத் தெரிந்தவரை சமாதானம் சொல்லுகிறேன். சட்ட புஸ்தகத்தில் தனித்தனி பிரிவு நெம்பர் எனக்கு ஞாபகமில்லாவிட்டாலும் தத்துவம் பூராவும் தெரியுமென்றும் செக்ஷனைப்பற்றி வேண்டுமானால் ஊருக்குப்போய் புஸ்தக சகிதம் சமாதானம் அனுப்புகின்றேன் என்றும் சொன்னார். பழையபடி சங்கத்தின் கொள்கைகளையும், நோக்கத்தையும் தெளிவாய் எடுத்துச் சொல்லி முடிவில் எல்லாருக்கும் திருப்தி ஏற்பட்டதா என்பதாக ஒரு முறைக்கு பல முறையாய்க் கேட்டு 9 மணிக்கு கூட்டம் முடிந்தது. மறுநாள் காலை வண்டியில் 6 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து பகல் 11 மணிக்கு மதுரை ஸ்டேஷன் வந்ததும் அவ்வூர் பிரமுகர்கள் வகுப்பு வகுப்பாகவும் மொத்தமாகவும் அநேகர்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான்கள் உத்தமபாளையம் முதலியார் அவர்கள், முத்துக்காமாட்சி முதலியார் அவர்கள், கவுன்சிலர்கள், முனிசிபல்சேர்மன், செங்குந்த மகா சங்கத்தார் முதலியவர்களோடு உத்தமபாளையம் முதலியார் அவர்கள் ஜாகையில் மாலை கூட்டத்தைப் பற்றி வெகுநேரம் பேசிவிட்டு, கலந்தவுடன் மாலை 6-மணிக்கு பெரிய மகாநாடு கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் உத்தமபாளையம் சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகிக்க 3-மணி நேரம் விஸ்தாரமாக சுயமரியாதை என்ன என்பதைப் பற்றியும், அதற்கு முட்டுக் கட்டையாய் இருக்கும் போலி சுயராஜ்யம், போலி மோக்ஷம், போலி புண்ணியம், தர்மங்கள் என்பதைப்பற்றியும்; பார்ப்பனீயம் என்பது என்ன என்பதைப் பற்றியும் தெளிவாக தானே ஆக்ஷேபணை சமாதானங்களுடன் பேசினார். மகாத்மா காங்கிரசின் போது நாயக்கருடன் ஒத்துழைத்த மதுரை காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் இம்மாதிரி சங்கத்தின் அவசியத்தை ஒப்புக்கொண்டு தாங்களே இருந்து இதை நடத்திக் கொடுப்பதாகவே சொன்னார்கள். ஸ்ரீமான்கள் சுந்தரம் பிள்ளை, முத்துக்காமாக்ஷி முதலியார், சங்கிலியா பிள்ளை, நடராஜ பிள்ளை முதலிய எல்லோரும் வந்து ஆதரிப்பதாய் ஒப்புக் கொண்டார்கள். அன்று இரவே மதுரைவிட்டுப் புறப்பட்டு மறுநாள் 3உ வெள்ளிக்கிழமை பகல் ஈரோடு வந்து சேர்ந்தார். (ஆங்காங்கு நடந்த உபன்யாசங்களின் சுருக்கம் திரட்டி தனியாகப் பிரசுரிக்கப்படும்.)

## "மத விஷயத்தில் சர்க்காரைப் பிரவேசிக்கச் செய்யாத பார்ப்பனர்கள்"

### தேவாரபாராயணத்திற்கு தடை உத்திரவு (இஞ்சங்ஷன்)

நமது பார்ப்பனர்கள் தென்காசி கோவிலில் சுவாமியுடனும், தேவாரத்துடனும், ஒத்துழையாமையும் பஹிஷ்காரமும் செய்ய நேர்ந்தது போலவே சங்கரன் கோவிலிலும் செய்ய நேரிட்டுவிட்டால், தங்கள் வரும்படிக்கு ஆபத்து வந்துவிடுமே எனப் பயந்து சங்கரன் கோவில் டிஸ்டிரிக்ட் முனிசீப்பு கோர்ட்டில் வியாஜ்யம் தொடுத்து தங்களுக்கு பிரசாதம் கொடுக்காததற்கு முந்தி தேவாரம் படிக்கக்கூடாது என்று (இஞ்சங்ஷன்) தடை உத்திரவு வாங்கிவிட்டார்களாம்; கோவில் அதிகாரிகள் அதை அப்பீல் செய்ய பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கிறார்களாம். இந்துமத சம்பந்தமான விஷயத்தில் சர்க்காரார் மூலமாய் நமது இந்துக்கள் பணங்காசுக்கு வரவு செலவு கேட்பதுகூட இந்து மதத்தில் சர்க்காரை பிரவேசிக்க விட்டுவிட்டார்கள் என்றுமாய்மாலக் கண்ணீர் விடும் நமது பார்ப்பனர்கள் தேவார பாராயணம் செய்வதை நிறுத்த சர்க்காரிடம் போயிருப்பதும், இந்துக்கள் அல்லாதவர்கள்கூட ஒருசமயம் இதற்கு தீர்ப்பு எழுதும்படியாகச் செய்வதும், இந்து மதத்தில் சர்க்காரை நுழையவிட்டதல்லபோலும்! ஏன்! பார்ப்பனர் கோர்ட்டுக்குபோனால் மதபக்தி; பார்ப்பனரல்லாதார் கணக்கு கேட்டால் மதத்துரோகம் போலும்!

ரோஜர் முத்தையா

## மூர்த்தி ஸ்தல தீர்த்தம்.

### (தொடர்ச்சி.)

கைவல்யசாமியார் எழுதுவது.

சமய ஒழுக்கமென்பது உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியேயன்றி வெறும் வெளிச்சடங்குகளல்ல என்பது முன் வியாசத்தின் கருத்தென்பதை உணர்ந்திருப்பீர்கள். ஒருவன் மனமொழி மெய்களினால் பரிசுத்தனாயிருந்தாலன்றி அவன் கோவிலுக்குள் செய்யும் வீண் ஆடம்பரத்தில் பயனில்லை என்பது ஒவ்வொருவர் மனதிலும் தோன்றும் விஷயமே. மனதிலும் மெய்யிலும் பரிசுத்தமாய்ப் பிரார்த்திப்பவர்கட்கே கடவுள் அருளுகிறார் என்பதையும் நம்மறிவு நமக்குத் தெரியப்படுத்தாமலிருப்பதில்லை. அந்தர்முக உபாசனையும், அகத்தூய்மையுமே உண்மையானவை என்றும் அவையின்றேல் வெளிப்பூசையால் பயன் ஒன்றுமில்லை என்றும் விவகாரத்தின் முடிவில் மாத்திரம் பேசிவிடுகிறோம். சித்த சுத்தியும் பரோபகாரமுமே சகலவிதமான உபாசனையின் சாரமாகும். வறியோரிடத்திலும், மெலிந்தோரிடத்திலும், நோயில்வருந்துவோரிடத்திலும், எவன் கடவுளைப் பார்க்கின்றானோ அவனே உண்மையான கடவுள் பக்தன். அவன் விக்கிரகத்தில் மாத்திரம் கடவுளைப் பார்ப்பவனாயிருந்தால் அவன் பூசை ஆரம்பத்திலேயே ஏமாற்றப்படத்தக்கதாகுமே அல்லாமல் பக்தியானதன்று. எவன் ஜாதி மத குல பேதமின்றி ஓர் ஏழை மனிதனிடத்திலாவது கடவுள் ஸ்வரூபத்தைக் கண்டு அவனுக்கு பாடுபட்டு உதவி புரிகின்றானோ அவனிடத்தில் கடவுளுக்குண்டாகும் அன்பைப்போல் ஆலயங்களில் மாத்திரம் கடவுளைக்காணப் பிரயத்தனப்படுபவனிடத்தில் அன்பு உண்டாவதில்லை. இதுவே நாற்கருத்தும் சத்தியமும் ஆகும்.

தீர்த்த யாத்திரையைப்பற்றி சாஸ்திரம் விதித்த கருத்தைக் கவனிப்போம். பிரமசாரியம், கிரகஸ்தாஸ்ரமம், வானப்பிரஸ்தம், சந்நியாசம், என நான்கு ஆச்சிரமம் வகுக்கப்பட்டிருக்கின்றன. வித்தைக்கும் ஒழுக்கத்திற்கும் குருகுலத்திலிருப்பவன் பிரமசாரி. வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப்பெறுதல், விருந்தோம்பல், செய்ந்நன்றியறிதல், நடுநிலைமை, தீவினை அச்சம் முதலிய இல்லற தருமங்களை நடத்துகிறவன் கிரகஸ்தன். இல்லறத்தையடைந்த மக்களிடம் தான் நடத்திவந்த குடும்பத்தை ஒப்புவித்து தானும் தன் பெண்ஜாதியும் தனித்திருந்து புண்ணிய கர்மங்களில் மனம் நிலைக்க தெய்வ ஸ்தலங்களையும் புண்ணிய நதிகளையும் மலையருவிகளையும் அடையவேண்டி சஞ்சரிப்பவன் வானப்பிரஸ்தன். எல்லாவற்றையும் உபேக்ஷித்து மோக்ஷத்திற்காக சுற்றித்திரிகிறவன் சந்நியாசி. அநேகமாக வானப்பிரஸ்தர்களுக்கே யாத்திரை விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அதாவது ரிஷிகளின் தர்மத்தை அநுசரிக்கவேண்டி, புண்ணியங்களான தீர்த்தங்களையும் நதிகளையும் அடைய யாத்திரை செய்கையில் குளிர், வெப்பம், மழை, காற்று இவைகளால் நன்றாக காய்ந்தவைகளும் வெடித்தவைகளுமான எல்லா அங்கங்களிலும் தோல்களையுடையவர்களாயும் பலவிதமான நியமங்களாலும், யோகாப்பியாசங்களாலும், கர்மானுஷ்டானங்களாலும் குறைந்துபோனவைகளும் நன்றாக காய்ந்தவைகளுமான மாமிசம், உதிரம், தோல், எலும்பு இவைகளை உடையவர்களாய் தைரியத்தைப் பெரிதாகக்கொண்டு சத்வகுண சம்பன்னராய் விளங்குகிறவர் வானப்ரஸ்தர் முன் இந்தக்கூட்டம் நிறைந்து கிடக்கும். இமயமலையின் உத்தர பாகத்தைத்தான் புண்ணிய பூமியென்றும் பரலோகமென்றும் சொன்னார்கள். இதனால் யாத்திரை இன்ன தன்மையுடையதென்பது விளங்கியிருக்கும். வடக்கே இருந்து வருகிறவர்கட்கு தெற்கே ராமேஸ்வரமென்றும் தெற்கே இருந்து போகிறவர்கட்கு வடக்கே காசியென்றும் யாத்திரை ஸ்தலமாக ஏற்படுத்தினார்கள். அவைகளைப்பற்றும்பண்டாக்களும் எல்லாவித போக போக்கியங்களுக்கும் சௌகரியம் செய்து கொடுக்கப்படும் பார்ப்பன வீடுகளும் அங்கு அழைத்துக் கொண்டுபோய் சேர்க்க இங்கு கெட்டுப்போன பார்ப்பனர்கள் அங்கு தரகர்களாகவும் ஏஜண்டுகளாகவும், அந்த காலத்தில் அங்கில்லை; இருக்கவேண்டிய அவசியமுமில்லை. இருப்பதால் யாத்திரையின் தத்துவம் பாழாகிறதே ஒழிய யாத்ரீகர்களுக்கு ஒருவித பலனுமுண்டாவதில்லை. இப்போதைய தீர்த்தயாத்திரைகளால் மனிதர்கள் எந்த விதமோ, சம்பாதித்த பொருளை வீணாகச் செலவு செய்கிறார்களே ஒழிய சாஸ்திரத்தின் கருத்துப்பிரகாரம் ஒரு நன்மையுமுண்டாவதில்லை. பிரவிர்த்தி மார்க்கமானது திரும்பவும் பிறப்புள்ளதாகும். நிவர்த்திமார்க்கமானது உத்தம தியான மோக்ஷமாகுமென்பது நம் மதத்தின் தத்துவம். அந்த நிவர்த்தி மார்க்கத்தின் வழியை அடையவே தீர்த்தயாத்திரை விதித்தது. யாத்திரைக்குப் போகிறவர்களை நமஸ்கரித்து வழியனுப்புகிறோம். திரும்பி வருவார்கள் அல்லது வரவேண்டும் என்கிற அர்த்தம் அதிலில்லை. அர்ச்சுனன் இன்று பகற்பொழுதுக்குள் சைந்தவனைக் கொல்லாவிட்டால் மதமகளிடம் சோறு வாங்கியுண்பவன் போகும் பாவத்தில் போவேனென்று பிரதிக்ஞை செய்தான் என்பது பாரதக்கதை. இதன் கருத்தை ஆராய்வோம். மக்களிடமும் [illegible] மகளிடமும் ஒப்புவிக்க வேண்டிய [illegible]த்தில் தன் முதிர்ந்த [illegible] தொலைக்க பிரயத்தி[illegible] அநுபோகம் இள[illegible] ஒத்து வாராததினால் [illegible] மனம் கசந்து [illegible] வேஷாதிகள்முதிர் [illegible] விட்டு, சாபம் கொ[illegible] நினைத்துச் [illegible] போகும் [illegible] மனம் கசந்து [illegible] கூடி அவ[illegible] நிமித் [illegible] சந்நியாச [illegible] வர்களை [illegible]யோர் இருந்த சுத்த மனதையோ கெடுத்து மரணமடைவதைவிட ப்ரவர்த்தி மார்க்கமான இல்லத்திலிருந்தது போதும் இதில் செய்யவேண்டிய வேலை முடிந்தது அவரவர்கள் காரியம் அவரவர் பார்க்கட்டும் என்று விட்டுவிட்டு நிவர்த்தி மார்க்கத்திற்குள் புகுந்து கடவுளையடையும் வழியில் கொண்டுவந்துவிட ஏற்படுத்தின தீர்த்த யாத்திரையைச்செய்து மோக்ஷத்தையடையவேண்டும்; அப்படியல்லாதவன் நரகத்திற்குப் போவான் என்பது அருச்சுனன் கருத்து.

மிதவசனம் மித ஆகாரம் நல்லது கெட்டதைப் பகுத்துப் பார்த்தல் அவா அறுத்தல் இந்திரியத்தை அடக்குதல் கடவுளே கதி என அநுபோகத்தில் தெரிவது இவைகளே நிவர்த்தி மார்க்கத்தின் படிகள். இவையடையவே தீர்த்தயாத்திரை விதித்தார்கள். இந்தக் காலத்து வதிகர்களும் புரோகிதர்களும் தங்கள் லாபத்தை கற்றுக்கொண்டார்களே ஒழிய சாஸ்திரத்தின் ரகசியத்தை ஜனங்களுக்கு வற்புறுத்தப் படிக்கவில்லை. இப்பொழுது வசதிக்காக ஏற்பட்டிருக்கும் ரயிலும், போட்டாரும், ஊர் பார்க்கவும் பண்டாக்களுக்கும் பார்ப்பாருக்கும் பணத்தை அள்ளி இறைக்கவுமே உபயோகப்படுகின்றன. கெங்கையில் ஸ்நானம் செய்தால் பாவமெல்லாம் போய்விடுமென்று நினைக்கப்படுகிறது. இது உண்மையானால் அதில் கிடக்கும் மீன் ஆமை முதலை முதல் ஜெந்துக்களுக்கும் 1800 மைல் நீளம் தினம் அதிலேயே குளிக்கும் ஜனங்களுக்கும் எவ்வளவு புண்ணியம் வர வேண்டும்! மற்ற மதங்களைப்போல் ஜீவவர்க்கம் தனித்தனி சிருஷ்டியல்லவே நம்மதம. நம்மதத்தில் ஆமைமீன் மனிதனாகலாம், மனிதன் ஆமை மீனாகலாம். அவையனைத்தும் சொர்க்கத்தில் தானே இருக்கவேண்டும். கெங்கையில் ஸ்நானம் செய்தால் புண்ணியமுண்டு என்கிற எண்ணம் அவைகளுக்கு உண்டோ? என்பீர்கள். நினைவில்லாமல் நெருப்பைத் தொட்டால் சுடாதோ என்பதற்கும் பதில் வேண்டுமே. யாத்திரை ஸ்தலத்தில் உங்கள் பணமெல்லாம் கட்டாயத்தால் பிடுங்கப்படுகிறதே இது புண்ணியமாகுமா? உங்கள் பணத்தாலல்லவா பார்ப்பாரப் பண்டாக்கள் வீட்டில் மிட்டாயும் அல்வாவும் பூரியும் நிறைந்து கிடக்கிறது உங்கள் வீட்டைச் சுற்றியும் பசியால் வாடும் ஏழைக் குடும்பங்கள் எத்தனை நிறைந்து இருக்கின்றன? ஏழைக்குடும்பங்கள் சந்தோஷப்படும் குளிர்ச்சிக்கு கங்காஸ்நானம் ஈடாகுமா? காசிபோய் திரும்பி வந்த உடன் சுண்டக்காய், பாகற்காய் ஆதண்டங்காய் இவைகளில் ஏதாவதொன்றை விட்டுவிடுவதாக விரதம் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்த விரதத்திற்கு ஏதாவது பலனுண்டானால் உங்கள் யாத்திரைக்கும் பலனுண்டு. சிலர் நான் காசிக்குப்போய் வந்ததிலிருந்து தீண்டப்படாதவர்களை தீண்டுவதில்லை அவர்களுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை என்னும் பாவமான கொடுமையை பெருமையாகப் பேசுகிறார்கள். காசியில் நடந்த ஒன்றை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். சங்கராச்சாரி சுவாமிகள் காசிக்குப் போயி

ருந்த சமயம் தாழ்ந்த ஜாதியான் என் மதிக்கப்பட்ட ஒருவனை விலகச்சொல்ல அவன் சங்கராச்சாரியாரைப் பார்த்து காமமும் கோபமும், லோபமும், பயமும், சோகமும், நிந்தையும், பசியும், சிரமமும் யாரிடத்திலில்லை. வேர்வையையும், மூத்திரத்தையும், மலத்தையும், சிலேட்டுமத்தையும், பித்தத்தையும், உதிரத்தையும் எல்லா மனிதர்கள் தேகம் தாங்கவில்லை பிரிக்கவில்லை - எதைக் கண்டு என்னை விலகச் சொன்னாய் என்றான். சங்கரர் இதைக் கேட்டதும் திகைத்து நின்று குற்றத்தை உணர்ந்தார். ஆனால் பார்ப்பனர் சாமியே அந்தப் பறையனாக வந்தாய்ச் சொல்லுகிறார்கள். அப்படியே வைத்துக்கொள்ளுவோம்; சுவாமியே பறையனாக வந்து சங்கரர் மூலமாக தீண்டாமையை ஒழிக்கப் பிரயத்தனப் பட்டும் தீண்டாமை ஒழியவில்லை யென்றால் இவர்கள் பிடிவாதத்திற்கு அளவுதான் எவ்வளவு?

வடதேசத்து யாத்திரையில் சிரார்த்தம் கொடுப்பது கயாவில். கயாவில் ஸ்ரார்த்தம் கொடுக்காவிட்டால் பிதிர்களுக்கு விமோசனமில்லை என்று அநேக நாளாக உபதேசமாயிருக்கிறது. பிதிர்க்கள் பணத்திற்குத் தகுந்தபடி சொர்க்கத்திற்கு அனுப்பும் அதிகாரம் பெற்றவன் அங்கு அநேக ஆடம்பரங்களுடனும் போக பாக்கியங்களுடனும் கயாவளி என்றபேரோடு குடியிருக்கிறான். இவனுக்கு விருந்தும் பணமும் கொடுக்காவிட்டால் சிரார்த்த பலமில்லை என்று சொல்லுவதற்கு அநேக நம் நாட்டுப் பார்ப்பனத் தரகர்களிருக்கிறார்கள். அவனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் நடக்கும் விருந்தில் பரிமாறின பூரி மிட்டாய்களை தொடத்தான் செய்வான். அதுவே பிதிர்களுக்கு திருப்தியை உண்டுபண்ணியிருக்குமென்று புரோகிதர்களால் சொல்லப்பட்டு வருகிறது. தீர்த்தயாத்திரைக்காரனை சிரார்த்தம் கொடுத்தவன் கை இரண்டையும் கட்டி பூமாலையால் கட்டி கயாவளியின் முன் மண்டி போட்டு உட்காரவைக்கப்படுகிறான். கயாவளி முதலில் "உனக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது" என்று சத்தியம் செய்யச் சொல்லுகிறான். பிறகு உன்னுடைய பிதிர்களை சொர்க்கத்திற்கு அனுப்பவுன்னுடைய சொத்தில் பாதி கொடு இல்லையேல் கால்வாசி கொடு இல்லையேல் ஆயிரமாவது கொடு இப்போது உன் கையில் பணம் இல்லையேல் நான் கடன் தருகிறேன் வாங்கிக் கொடு; அப்படி கொடுக்காவிட்டால் உன் பிதிர்கள் சொர்க்கத்திற்கு போகமாட்டார்கள் என்று பய முறுத்தி இவன் புத்தியும் முட்டாள்த்தனத்திற்கும் தகுந்தபடி பணம் பிடுங்கப் படுகிறது. இதோடு வடதேசத்து தீர்த்தயாத்திரை முடிகிறது. இதெல்லாம் செங்கார்ல் அஸ்திரயாதிடால் இறந்தவர்களுக்கு விசேடமென்று கேட்டு எத்தனை [illegible] பழக்கமும் தாய்த்தகப்பனுக்குச் [illegible] செய்கிறோம் என்கிற [illegible] அன்னியர் மையபற்றி [illegible] என்கிற ஆசையும் [illegible] அவர்கள் செய்வார்கள். நாமும் செய்ய வேண்டுமென்கிற அறியாமையுமே ஒழிய வேறு யாதொரு பிரயோஜனமுமில்லை. இப்பொழுது ஒரு அனுகூலமேற்பட்டிருக்கிறது பார்சலில் அனுப்பும் வழக்கமும் வந்துகொண்டிருக்கிறது.

ராமேஸ்வரத்தில் பிள்ளை இல்லாதவர்கள் அநேகர் நாகர் பிரதிஷ்டை செய்கிறார்கள். நாகர் பிரதிஷ்டையின் கசிய அர்த்தமென்னவென்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். சர்ப்பத்தைக் கொன்ற குடும்பங்களுக்கு கொன்ற பாவத்தால் சந்தானம் உண்டாவதில்லையாம். அதற்காக அந்தப் பாவம் தீர நாகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு வருகிறது. சர்ப்ப பூஜை ஆரியர்களுக்கு ஏற்பட்ட காலத்தையும் வழக்கத்தையும் அது தென் தேசத்தில் வந்து புகுந்ததையும் இவ்விடத்தில் சொல்லவேண்டுவதும் அவசியமானாலும் அவை பிரயோஜனமற்ற வீண்கதைகள். வியாசமும் விரிந்துவிடும். சர்ப்பத்தைக் கொன்றதால் சந்தானமுண்டாவதில்லை என்பது உண்மையாயிருந்தால் பாம்பாட்டிக்கு சந்தானமே இருக்கப்படாது. பாம்பாட்டி மகன் பாம்பாட்டி. அநேகரைப் பார்க்கிறோம். ஆனதால் சர்ப்பதோஷம் இதுவல்ல இந்தப் பிரதிஷ்டையில் பிரயோஜனமுமில்லை. பின் சர்ப்ப தோஷ மென்பதுதானென்ன? பூமியைத் தாங்கும் சக்தியான வாயுவிற்கு ஆதிசேஷனென்று பேர். நம் தேகத்தைத் தாங்கும் வாயுவிற்கும் சர்ப்பமென்கிற பேருண்டு. சுக்கிலத்தை சரியாய் போஷிப்பது சரியான இடத்தில் சரியாய் கொண்டுபோய் சேர்ப்பது வாயுவின் வேலை. அந்த வேலையை வாயு சரியாய் செய்யாவிட்டால், சந்தானமுண்டாகாது. அப்பொழுது வாயுவின் தோஷமென்று சொல்லவேண்டும். "ஆமப்பா ஆண்மகடலல்லால் அப்பனே பெண்மலடியாகுமில்லை" என்றது நம் வைத்தியம். சோதிட சாஸ்திரத்தில் சர்ப்பமென்பதற்கு வாயுவென்று அர்த்தம் எங்க ஜாதகத்தை சோதிடன் பார்த்தாலும் சந்தானம் இல்லை என்று தெரிந்தால் சர்ப்ப தோஷம் சொல்லியே தீருவான். சோதிடனும் புரோகிதனும் பங்காளிகள். தீர்த்தயாத்திரை ஸ்தலங்களில் வரும்படியைபாக கொள்ளையடிக்கும் பண்டாக்களும் குருக்களும் அவர்களுக்கு உளவு சொல்லும் நம்தேசத்து [illegible] போல பார்ப்பனத் தரகர்களும் இருந்து அவ்விடங்களில் நடக்கும் அக்கிரமங்கள் யாத்திரை செய்தவர்களுக்கெல்லாம் தெரிந்ததே.

---

## ஐய விஞக்கள்.

### கைவல்ய சாமியார் கவனிக்க

ஸ்ரீ கைவல்யசாமியார் சந்நிதானத்திற்கு. பாரதமக்களின் அஞ்ஞானத்தையோட்டும் அண்ணலே! சிற்றறிவோன் மனத்தெழும் அடிபிடிகண்ட ஐயப்பாட்டை 'குடி அரசின்' வாயிலாக நீக்க உழுவலன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

1. இறந்த மனிதரின் ஆத்மா அலகை யென்னுமோர் பெயர்பூண்டு உலகில் நிலவுவதுண்மையா? 2. அது பெண்மணிகளைப் பிடிப்பது உண்மையா?

மேற்குறித்த இரண்டும் இல்லையேல், ஓர் பெண்மணி, ஓராலயத்தின் முன்னின்று யாருடைய ஏவுதலுமின்றி சுயேச்சையாய் தலைவிரித்து ஆடி ஓங்கார சப்தமிடுவதேன்? சுவாமியின் பக்தி மேலீட்டால் அவ்விதமிருக்கலாமென்று சொல்ல குறிகளும், சொற்களும், செய்கையும் கோரமுடையனவாயுள்ளன. அதே பெண்மணியை வீட்டிற்கழைத்துவந்து குளிக்கச்செய்து ஓரிடத்தில் உட்காரவைத்து, முன்னிலையில் ஓர் கலத்துள் மஞ்சள் நீர் விட்டு, வேப்பிலைக் கொத்து வைத்து, கண்ணடக்கம் முதலியன வைத்து சாம்பிராணித் தூபமிட்டு இருவர் அல்லது மூவர் உடுக்கை தட்டி சில அசம்பாவிதமான பாடல்கள் சொன்னவுடன் அம்மாது தலைவிரி கோலத்துடன் சுழன்று ஓங்காரமிடுகின்றது! அதைக் கேட்டு ஊர் பெயர் முதலியவற்றை சொல்லும்படி கேட்டவுடன், அது தான் கண்டுங் கேட்டுமிலாத ஓர் இறந்துவிட்டவனின் சரிதையை முடிக்கிறது. பின்பு பூசாரியின் தந்திரோபாயத்தால் தான் அப் பெண்ணை விட்டுச்செல்வதாகவும் சொல்லி சில நிபந்தனைகளுக்குட்பட்டு, தான் கேட்கும், சிலவற்றை பூசாரி கொடுக்கவும், போவதற்கறிகுறியாக அப்பெண், இயற்கையில் எடுக்கமுடியாத ஓர் கல்லைத் தூக்கிக்கொண்டு செல்லவும், எற்கனவே தலைமுடியில் முடிபிட்டிருக்க முடியை ஓர் ஆணியுடன் பசுமரத்திலடித்து விட்டு வீட்டிற்கு வந்து அப் பெண்ணை நிறுத்தி உடுக்கை தட்டவும் முன்போல மயிர் விரித்தாடும் கோலமகன்று தெய்வப் பெயரை மொழிகிறது. நாலைந்து பொருள்கள் வைக்க குறித்த பொருளை எடுத்துத் தருகிறது.

இவ்வற்புதச் செயலை பலரிடம் கேட்டும், வாசித்தும் தீராத சந்தேகம் தேவரீரால் 'குடியரசின்' மூலமாகத் தீருமென்ற நம்பிக்கையுடன் வரையத் துணிந்தனன் என்று உத்தமபாளையம் தமிழாசிரியர் ஸ்ரீமான் ஏ. தணிகாசலம் பிள்ளை கேட்டுக் கொள்ளுகிறார்




இனம்! லிவர் பாக்கெட் வாட்ச். இனம்!

14 கேரட் பவுண்டன் பேனா.

அடியில் குறிக்கப்பட்ட எங்கள் இரடியம் திப்புள்ள பேனாவை வாங்குபவர்களுக்கு இனாமாய் லிவர்வாட்ச் இனம். வாட்ச் சரியான காலம் காட்டும். லிவர் [illegible] காலம் உழைக்கும். பேனாவுக்கும் கெடியாரத்திற்கும் உத்திரவாதம் 5 வருஷம். ரொம்பவும் குறைந்த விலை ரூ. 3 15 0.

லிவர் வாட்ச் இனம் முந்துங்கள், கையிருப்பு கொஞ்சம்தான்.

டெக்கன் வாட்ச் டிபோ, (ஹ) 11வது வீதி, சவுகார்பேட், மதராஸ்.

### சென்னை சேப்பாக்கம்,

## இந்து பால பாடசாலை மாணவர் சங்கம்.

### 2-வது ௵ முதல்மாதப் பூர்த்திக் கொண்டாட்டம்.

சென்னை சேப்பாக்கம் அருணாஜல ஆச்சாரி தெரு 28 நெம்பர் ௸ பாடசாலையின் கட்டிடத்தில் 1926௵ நவம்பர்-௴ 17௳ புதன்கிழமை மாலை 5-மணிக்கு ௸ பாடசாலை மாணவ மாணவிகளின் இரண்டாவது வருஷ முதல் மாதத்திய பூர்த்தி வைபவம் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமான் எஸ். ஜி. அரங்கராமாநுஜ முதலியார் பி. ஏ. பி. எல். முனிசிபல் கவுன்சிலர் அவர்கள் அக்ராசனம் வகிக்க வேண்டியிருந்தது. அவர் அவ்வமயம் சில காரணத்தின் பொருட்டு அக்கிராசனம் வகிக்க முடியாததினால் திராவிடன் பத்திராதிபர் ஸ்ரீமான் ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் அக்ராசனம் வகித்தார். அக்ராசனர் முகவுரையில் இந்து பால பாடசாலை மாணவர் சங்கத்திற்கு நான் அக்கிராசனம் வகிக்கும்படி நேர்ந்ததற்கும் நம் இந்து மதத்தை சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு போதித்து வருவதற்கும் தாம் அதிக சந்தோஷப்படுவதாகவும், இதைப்போல் வாலாஜா நகரில் ஓர் இந்துமத பாடசாலைக்கு போதுமான பணவுதவி இல்லாமல் கஷ்டப்படுவதாகவும் இப்பேர்ப்பட்ட பாடசாலைகளுக்கு உதவி செய்ய பெரியோர்கள் முன்வருவதில்லை என்றும் இதர மதஸ்தர்கள் வெளியூர்களில் இருந்துவந்து தம்மதத்தை பெருகச் செய்வதோடு மதத்திற்காக பணங்களை ஏராளமாக செலவு செய்வதோடு வீதி வீதியாகச்சென்று பிரசங்கள் செய்து தம்மதங்களை பெருகச் செய்திருக்கிறார்கள் என்றும் கூறினார்.

பிறகு ௸ சங்கத்தின் காரியதரிசி கே. சாவித்திரி அம்மாள் துருவ சரித்திரம் முக்கால் மணி நேரம் வெகு விமரிசையாக உபந்யாசம் செய்தார். அடுத்தாப் போல் சீனிவாசன், எஸ். சௌந்தரராஜன் பூங்காவனம் அம்மாள், வி நாராயணசாமி அவர்கள் ‘சரவணபவன் அவதாரம்’ முதல் ‘சூரசம்மாரம்’ வரையில் உபந்யாசித்தார்கள். பிறகு சாவித்திரி அம்மாளும் ராஜாம்பாளும் கடவுள் என்பதைப்பற்றி சபாபாஷணை செய்தார்கள்.

பிறகு அக்கிராசனர் முடிவுரையில் இப்பாடசாலை மானேஜரும் உபாத்திமார்களும் இப்பாடசாலையில் வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்கு சிறுவயதிலேயே சரித்திரங்கள் மூலமாகவும் கடவுளிடத்தில் பக்தியோடு நடந்துகொள்ளும் மார்க்கத்தை போதித்து வருவதினால் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன் என்றும், மூங்கில் ஒன்றை இளம் வயதிலேயே வளைத்தால் வளையுமே தவிர முதிர்ந்துவிட்டால் வளையாதென்றும் அதைப்போல இள வயதிலேயே மதக் கல்வியை போதிக்க வேண்டும் என்றும் ௸ சங்கத்தின் காரியதரிசி சாவித்திரி அம்மாளும் பூங்காவனமும் பாடியபாடல்களையும் அவர்கள் வாசா சுத்தங்களையும் நாம் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை என்றும் கூறினார். இப் பாடசாலையைப் போல் இந்தியாவிலுள்ள பாடசாலைகளும் ஒவ்வொருவரும் தாய் பாஷையை பெருகச் செய்வதோடு கார்ப்பரேஷனும் கவர்ன்மெண்டும் இவ்விதமான கல்வியை போதிக்கச்செய்வார்களானால் நம் தேசம் கூடிய சீக்கிரத்தில் முன்னேற்ற மடையுமென்றும் இப்பேர்ப்பட்ட பாடசாலைகளுக்கு அநேக கனவான்களும் உதவி புரிவார்களென்றும் கேட்டுக் கொண்டார்.

பிறகு அக்கிராசனருக்கு வந்தனோபசாரத்துடன் மாலை சூட்டிய பிறகுமாலை 7-மணிக்கு கூட்டம் கலைவுற்றது.

இதைக் கண்ணுறும் கனதனவான்களுக்கும் மதப்பற்றுதல் உடையவருக்கும் ஒரு வெண்டுகோள். இப்பாடசாலையில் அநேகமாக ஏழைப் பிள்ளைகள் வாசிப்பதினால் ஏழைப் பிள்ளைகளுக்கு புஸ்தகம் பலகைகள் உடைகளும் பெண் பிள்ளைகளுக்கு தையல் ஆர்மோனியம் உல்லன் நூல் இன்னும் இதர சாமான்களும் இலவசமாய்க்கொடுக்க வேண்டி இருப்பதினாலும் நம் திராவிட மக்கள் முன்னேற்றம் அடையும் பொருட்டும் பெரியோர்கள் இப்பேர்ப்பட்ட பாடசாலைகளுக்கு உதவி செய்வாரென்று கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

உதவிபுரியும் கனவான்கள் ௸ பாடசாலை மாணவர் சங்க காரியதரிசி கே. சாவித்திரி அம்மாள் என்று அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று காரியதரிசி ஸ்ரீமதி K. சாவித்திரி அம்மாள் அறிவிக்கிறார்.

---

## செய்திகள்.

அன்னசாகரம் கி. மு. கந்தசாமி நாயுடு 21—11—26-ௗ. ஞாயிற்றுக் கிழமை வைகுந்தபதவி அடைந்து விட்டார் என அன்னசாகரம் ஸ்ரீமான் கி. மு. ராமச்சந்திர நாயுடு அறிவிக்கிறார்.

---

நாளது அக்ஷய-௵ கார்த்திகை-௴ 14-௳ சோமவாரம் திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டில் எழுந்தருளி இராநின்ற ஸ்ரீ அர்த்தநாரீஸ்வர சுவாமி நம் செங்கோட்டு வேலவர், ஆதிகேசவப் பெருமான் மற்றுமுள்ள பரிவார தேவதைகளுக்கும் அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சமாராதனையும் திருச்செங்கோடு புள்ளிக்காரர் வ. வெ. கா. வி. நடேச முதலி அண்டு பிரதர் அவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனர்கள் நிலவரி, முனிசிபல் வரி தபால் கட்டணம் முதலியவற்றைக் குறைத்துவிடுகிறோம் என்கிறார்கள். இந்த ரகஸ்யம் வேறு. தங்கள் ஜாதித் தொழிலான வருண பகவானை வேண்டி மழைபெய்வித்தல் முதலிய காரியங்களைச் செய்தலோடு சம்பளமில்லாமல் உத்தியோகங்களையும் பார்ப்பார்களா? என்று தல்லாகுளம் ஸ்ரீமான் நாகப்ப முதலியார் கேட்கிறார்.

---

25—11—26ௗ. சங்கரண்டாம் பாளையம் பட்டக்காரர் ஸ்ரீமான்வேணுடையாக்கவுண்டர் அவர்கள் திருப்பூருக்குவந்திருந்தார். அது சமயம் ஸ்ரீமான் கே கி. வி. எம். பெரியசாமி செட்டியாரும் அவ்விடமிருந்தார். ௸ ஸ்ரீமான் பட்டக்கார கவுண்டர் நான் சுயராஜ்ய பார்ட்டியில் சேர்ந்தவனல்லன் என்று மதுரையிலிருந்து சுதேசமித்திரனுக்கு தந்தி கொடுத்திருப்பதாகச் சொன்னார். இவ்வாறிருக்க ‘மித்திரனும்’ அவனைத் தழுவி நடக்கிறவர்களும் ஸ்ரீமான் கவுண்டரை ஏன் சுயராஜ்ஜியக் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற இரகசியம் தெரியவில்லை என திருப்பூர் எஸ். சொக்கப்ப செட்டியார் அறிவிக்கிறார்.

குறிப்பு:—

ஸ்ரீமான் சொக்கப்ப செட்டியார் குறிப்பிட்டுள்ள விஷயத்தைப் பற்றி யானும் ஸ்ரீமான் ஈ. வி. கிருஷ்ணசாமி நாயக்கரவர்களும் 1-12-26ௗ காலை ஸ்ரீமான் வேணுடையாக் கவுண்டரவர்களை நேரில் சந்தித்த போது கேட்டதில் தான் மதுரையிலிருந்து தந்தி கொடுத்தது உண்மைதானென்றும் எக்கட்சியிலும் சேர இஷ்டப்படவில்லையென்றும் அபேக்ஷகர் நியமனப் பதிவு காலத்தில் கலெக்டரிடத்திலும் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டதாகவும் கூறினார். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்பார்த்தால் போதும் என்றபடி பார்ப்பனர் தம் கட்சி பலத்தின் ரகஸ்யத்தை வாசகர்கள் இதன் மூலம் கண்டு தெளிவாராக. (வி. ரா.)

---

## ஆரணி யூனியன் போர்டு தேர்தல்.

29—11—26ௗ ஆரணி யூனியன் போர்டுக்கு தலைவர் தேர்தல் நடைபெற்றது. ஜனாப் அப்துல் சுக்கூர் சாயபு அவர்களும் ஸ்ரீமான் ஸ்ரீநசந்திர நயினார் அவர்களும் தலைவர் பதவிக்கு அபேக்ஷகராக நின்றார்கள். ஜனாப் சாயபு அவர்களுக்கு 8 ஓட்டுகளும், ஸ்ரீமான் நயினாருக்கு 5 ஓட்டுகளும் கிடைத்தன. அதிக ஓட்டுகள் பெற்ற ஜனாப் அப்துல் சுக்கூர் சாயபு அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். யூனியன் போர்டு தலைவர் தேர்தலைப் பார்க்க ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். இம்மாதிரிக் கூட்டம் எலெக்ஷனில் இதுவரையில் கண்டதில்லை. வெற்றி பெற்ற தலைவரை ஊர்வலமாக அழைத்துவர சில வியாபாரிகள் முயன்றும், அம்மாதிரி ஆடம்பரமான வரவேற்பு வேண்டியதில்லை என்று தலைவர் அறிவித்துவிட்டார். ஜனாப் சாயபு அவர்கள், ஏழைகளின் நண்பர் பரோபகாரி செல்வாக்குள்ளவர் என்று நமது விசேஷ நிருபர் எழுதுகிறார்.

---

## கௌரி ஆயுர்வேத சித்த வைத்ய மந்திரம்.

**கௌரி பாலாம்ருத ஸஞ்சீவி குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும் பலவித நோய்களைக் கண்டிக்கத்தக்க ஔஷதங்கள் ஆறு அடங்கிய அழகிய பெட்டி.**

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டிக்கக்கூடிய பின்வரும் ஆறுவிதமான மருந்துகள் பிரத்தியேகமான சீசாக்களிற்போட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. 1. குழந்தைகளின் ஜலிப்பு, சளிக்கட்டு இருமல் இவைகளுக்கு உபயோகிக்கும் கௌரி கோரோஜனை. 2. ஜுரம் இசிவு ஜன்னிகள் வந்த காலத்தில் கொடுக்கும் கௌரி கஸ்தூரி 3. ஸ்நானஞ் செய்வித்த பின் குழந்தைகளுக்கு உரைத்துப்போடும் உரைமாத்திரையாகிய கௌரி பால கற்பம் 4. குழந்தைகளின் வயிற்றில் கிருமிகள் கட்டுகள் சேராமல் பேதி யாவதற்காகக் கொடுக்கும் கௌரி பால விரோசனி 5. குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்போக்கை நிறுத்தவல்ல கௌரி குணாந்தம் 6. குழந்தைகளுக்கு மாந்தங்கள் வந்தால் கொடுக்கும் கௌரிபாலபோஷணி. இந்த ஆறு அரிய மாத்திரைகள் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகிக்கும் வழிகளைப் பெட்டிக்குள்ளிருக்கும் பிரயோக விதியில் காண்க. பெட்டி ரூ. 3.

இப்பெட்டி ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது அவசியம். இருந்தால்குழந்தைகளைவியாதிகள் தொடரா வண்ணம் காப்பாற்றும். வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. குழந்தைகட்கு வியாதிவந்தால் தக்க சிகிச்சை இல்லாமல் சிசு மரணம் அதிகம் ஆகின்றன. இதன்பொருட்டே மூன்று வருடங்களுக்குமுன் சென்னையில் வெளிவரும் நவசக்தி பேப்பரில் குழந்தைகள் வைத்தியம் அதாவது குழந்தைகளை வியாதி தொடராத வழிகளை வாரம் வாரம் எழுதி வந்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் குடும்ப வைத்யம் அதாவது வைத்யர்கள் தயவின்றி தாங்களே வைத்யம் செய்துகொள்ளும் புத்தகம் வெளிவரும். அதில் வியாதி வராமல் இருக்கும் மார்க்கங்கள், நோய் வந்துவிட்டால் அதனை நிவர்த்திக்கும் சுலபமான முறைகள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியிருக்கும். இது பொது ஜன நன்மையைக்கோரி அநேகர் வேண்டுகோளின்மேல் எழுதி முடிக்கப் பெற்றது. பல வைத்தியர்களும் டாக்டர்களும் பார்த்து தீராதென விடப்பெற்ற குஷ்டம், குன்மம், சுவாசகாசம், பாரிசவாய்வு, ஆரம்ப ஆனைக்கால், பிஜவீக்கம், நெரி கட்டி வரும் ஜுரம் பிளேக், காலரா, கண்டமாலை இன்னும்பல கடின வியாதிகட்கும் சிறந்த சஞ்சீவி ஔஷதங்கள் இருக்கின்றன. மேற்படி நோய்கள் ஸ்ரீ கௌரி தேவியின் அனுக்கிரகத்தால் அநேகம் குணப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கமெடல்களும் பெற்றிருக்கிறேன். இதனை எம்மிடமுள்ள முழு விபரம் அடங்கிய கேட்லாக்கில் காணலாம். சில போலி வைத்தியர்கள் மலிந்துள்ள இக்காலத்தில் மேற்படி வியாதிகளைக் குணப்படுத்துகிறேன் என்றால் எம்மிடம் ஔஷதம் வாங்கி உபயோகிக்காத புதிய நண்பர்கட்கு நம்பிக்கை வருவது கஷ்டம்.

டாக்டர் *V. R.* சுந்தரம்,

ஸ்ரீகௌரி ஆயுர்வேத வைத்ய மந்திரம். 268, பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.



காதல் ரசம்! அற்புத வர்ணனை!!

### ராஜ ராஜம் அல்லது காதலரின் வெற்றி.

இதில் காதலர் இருவர் காதலை அந்தரங்கமாய்ப் பெருக்கிக்கொள்ளல். காதலியின் தந்தை வேறொருவருக்கு விவாகம் நிச்சயித்தல். அப்பெண் பெற்றோர்களுக்கு காதல் மணக் கடிதம் எழுதி வைத்து இறந்துவிடல். மீண்டும் காதலி உயிர்ப்பிக்கப்படுதல். உலகத்தார் வியக்கும் வண்ணம் இவர்கள் விவாகம் நடைபெறுதல் முதலியன வாசிப்போர்க்கு முக்கனியேயாகும். காதல் ரசம் ததும்பியுள்ள இந்நாவலின் விலை 6 அணாதான்.

8 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒன்று அனுப்பப்படும்.

ஜீவ வசிய பரமரகஸ்யம்.

விழிப்பு நிலையில் மானிடரை வசியப்படுத்தும் வசிய நூல் இதுதான் 30 அரியவசிய இரகசியப்பாடங்களும் வேறு பல மர்ம ரகசியங்களும் மலிந்து கிடக்கும் விலை ரூ. 3 தான்.

ஆயிரந்தலைவாங்கிய அதிசய சிந்தாமணி ரூ. 1 0 0

| | | | |
|---|---|---|---|
| ஆங்கில ஆசான் | 2 0 0 | பண்டிதை மெஸ்மெரிஸா | 1 0 0 |
| அண்டப்புளுகன் | 1 0 0 | கருப்பசாஸ்திரம் | 1 8 0 |

ஏ என். ராஜா & கோ., ராயபுரம் (2) மதராஸ்.


### மணப்பாறை

திரு. T. D. சுந்தரராஜுலு என்பவருக்கு வயது சுமார் 22 இருக்கும். இவர் நாயுடு வகுப்பைச் சார்ந்தவர். இவர் இதுவரை வியாபார முறையில் ஈடுபட்டிருந்து ஓர் மாதகாலமாய் அத்துறையை விட்டு ஓர் பெரியாரின் உபதேசத்தால் தனிமையாய் ஓர் ஜாகா ஏற்படுத்தி அதில் [விநாயகர் விக்கிரகம்] வைத்து தினம் மூன்றுகால "சத்தி பூஜை" நடத்தி வருகிறார். இவரது குறை நிசயங்கள் பெரிதும் ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கிறது. ஓர் மாத காலமாய் இப்புண்ணியசீலர் எத்தகைய நோய் வாய்ப் படுபவர்கட்கும், பேய் பிசாசுபிடித்துள்ளார்கட்கும், பில்லி, சூன்யம் என்னும் ஏவலால் துண்டப்பட்டுள்ளார்கட்கும், குழந்தைகள் பிணிகட்கும் தனது விபூதிபிரசாதம், மஹிமையினாலே சொஸ்தப்படுத்தி வருவதால் ஏராளமான ஜனங்கள் வருகின்றனர். 27—11—26-ல் முதல் இப்புண்ணிய சீலர் "சத்தி பூஜை" 48 நாளைக்கு உண்ணாவிரதம் கொள்ளப் போகிறார். சிகாகில் பெரிய மகானுபாவர் மகிமை ஏற்படுமென நம்புகிறேன், இவரது அபாரசக்தியை விரிவாய் வரைய நம் பத்திரிகை இடம் தராதென சுருக்கி எழுதியிருக்கிறேனென "திராவிட சங்க" காரியதரிசி திரு. கே என். நாராயணசாமி பிள்ளை அவர்கள் எழுதுகிறார்.

### பாலக்காடு.

30—11—26-உ யில் பாலக்காடு பெரிய கடை வீதியில் நிறுவப்பட்டுள்ள விஸ்வ பாரதி வாசக சாலை (Viswa Bharathi Reading Room) யின் 2-வது ஆண்டு நிறைவு விழா கோவை ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமண ஐயங்கார் தலைமையின் கீழ் நடைபெற்றதென வரவேற்புக் கழகத் தலைவர் ஆர். ராகவமேனன் எம். ஏ, பி. எல். அறிவிக்கிறார்.


### வர்த்தக யுக்தி.

ஸ்ரீமான் M. A. நெல்லையப்பர் எழுதியது.

இந்நூல் நாவலல்ல—கதையல்ல. ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தை ஊட்டி உன்னத ஸ்திதிக்குத் தோண்டுவாத்தக்க அருமையான புத்தகம். இதுவரை நாலாயிரம் பிரதிகள் விசேஷ விளம்பரமின்றிச் செலவாகிவிட்டன. இது புதிய பதிப்பு. விரிவான நூல். அதிக விஷயங்கள் அடங்கியுள்ளது. படிக்கப்படிக்க உற்சாகத்தை தரக்கூடியது. அவ்வளவும் அனுபவங்கள்.

வர்த்தகயுக்தி என்ற பெயருக்கேற்ப அநேக யுக்திகளும், வியாபாரம் செய்வதற்கான வழிகளும், விளம்பரம் செய்யவேண்டிய முறைகளும் கோர்வையாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

விலை அணா 12. தபாற்செலவு வேறு.

கேட்லாக் இனாம்.

அமிர்தம் அண்டு கோ.,

165, பிராட்வே, தபாற்பெட்டி 222,

மதராஸ்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

# ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சால்வதி விலாசம் பிரஸாக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்

ஆயிரக்கணக்கான

ஆயிரக்கணக்கான வியாதியஸ்தர்கள்
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

# இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ளூ டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

**சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:**—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

**பிக்செட் டிபாசிசிட்டு ஒரு வருஷ கெடுவு:**—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், ரண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும்செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள்செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீடில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானல், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வதுபக்கம் (உ) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

# பி. பி. அன்ஸன்

## பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

**அரரூட் பிஸ்கட்.**

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

**சூஸ்பரி பிஸ்கட்.**

புஷ்டியைக் கோடுக்கக் கூடியது.

**பழம் கேக்.**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

# மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத் ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

# சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.



இனாம் இனாம்!!

# ரகஸ்ய ரத்னம்

அல்லது

## வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபாற் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபாற் பெட்டி 222, மதராஸ்
பிரஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S.I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

---

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

## எமது "ஆநந்த குண போதினி."

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:— இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவர துவங்குகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

---

**ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?**
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

## ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

---

இனாம்! இனாம்!
சர்வரோஹ சம்ஹாரி

## அமின்சார காந்தி.

இதை எல்லா வியாதிகளுக்கும் துளிக் கணக்கில் உபயோகித்தால் உடனே குணமடையலாம். பால்யர்முதல், விருத்தர்வரை யாதொரு பத்தியானுபானமின்றி, உபயோகிக்கக் கூடிய முறையில். உயர்ந்த சரக்குகளால், தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இது ஒவ்வொரு குடும்பத்திலும், கப்பல், ரயில்வே பிரயாணிகளிடத்திலும் இருக்கவேண்டியது அவசியமாதலின், இன்றே அமின்சார காந்தியை வரவழைத்து பரீட்சியுங்கள். வெளியூர் ஏஜண்டுகள் தேவை. மாதிரி மருந்தும், கேட்லாக்கும் இனாம். விலை பாட்டல் 1க்கு ரூ 2.
தபால் சார்ஜ் வேறு

அமின்சார காந்தி டிபோ,
சேலம், மார்கெட்.

---



## பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கிபாட்லாக் இனாம்.
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.